விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 121 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 06 புதன்கிழமை (19.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# அம்மன் சிலையை அகற்றக்கோரும் சட்ட அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை

## நீதிமன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் வாதம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணை சுற்று வட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாகபூஷணி அம்மன் சிலையை அகற்றுவதற்கு யாழ். நீதிமன்றம் கட்டளையிட வேண்டும்மெனக் கோரும் சட்ட அதிகாரம் பொலிஸாருக்கு கிடையாது.

எனவே அடிப்படையில் சட்ட வலு வற்ற பிரஸ்தாப மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்ய வேண்டுமென ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வாதிட்டார்.

யாழ்.பண்ணையில் நாகபூசணி அம்மன் சிலை அனுமதி பெறாமல் வைக்கப்பட்ட 02

# நல்லிணக்க ஆணைக்குழு நிச்சயம் வெற்றி பெறும்

## எதிர்ப்பவர்கள் கருத்துக்களை பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும் – பிரதமர் தினேஷ்



(கொழும்பு)

**உண்மை நல்லிணக்க ஆணைக்குழு நிச்சயம் வெற்றி பெறும். இதனை எதிர்ப்பவர்கள் கருத்துக்களை பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உள்ளகப் பொறிமுறைக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதில் வழங்கியிருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை 15

## கிளிநொச்சியில்
## இராணுவ வீரர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் விபரீத முடிவெடுத்த இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வேலைத்தளத்தில் தனது கைத்துப்பாக்கியால், தன்னைத்தானே சுட்டுத்தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை கிளிநொச்சி 651 காலாட் 15

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான
மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின்
**பரீட்சை வினாத்தாள்**
உள்ளே

## மல்லாகத்தில் ஷெல் மீட்பு



(யாழ்ப்பாணம்)

மல்லாகம் தெற்கு பகுதியில் உள்ள வாசிகசாலை ஒன்றுக்கு அருகாமையில் இருந்து ஆர்பி.ஜி ஷெல் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் 15

## ஐ.எம்.எப் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த

### பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு 15

## வெப்பமான வானிலை

### வடக்கு மாகாணங்கள் உட்பட 8 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் 8 மாவட்டங்களுக்கு வெப்பமான வானிலை தொடர்பான எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம், குருநாகல், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் வெப்பமான வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

போதுமான அளவு நீர் பருகுமாறும் நிழ 15

## போலிப் பிரசாரங்களை நம்பாதீர் அரசாங்கத்துடன் தொடர்பு இல்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

மக்கள் நிராகரித்த அரசாங்கத்துடன் எங்களுக்கு எந்தவித தொடர்புகளும் இல்லை. எனவே போலிப் பிரசாரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லர் கோய பல்ஸைப் பயன்படுத்தி 15

## இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளன

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

மேலும் பல பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் எதிர்காலத்தில் தளர்த்தப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சுங்கத்தின் எதிர்பார்க்கப்படும் வருமான இலக்கை அடைவதற்கும் இது உதவும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுங்கத்துறையின் வருமான இலக்கு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மின்சாரசபையின் மறுசீரமைப்பு செயல்முறைக்கு

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு செயல்முறையின்முன் மொழியப்பட்ட வரைபடத்திற்கும் கால அட்டவணைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இதனை தெரிவித்தார்.

இதன்படி, மே மாத இறுதிக்குள் புதிய மின்சார சட்டத்தின் இறுதி வரைவு பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மறுசீரமைப்பு திட்டத்தை ஒருங்கிணைக்க ஒரு பணியகத்தை நிறுவவும், குறித்த செயல்முறை மற்றும் மறுசீரமைப்பு திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, USAID மற்றும் JICA போன்ற அபிவிருத்தி பிரதிநிதி நிறுவனங்களின் ஆதரவைப் பெறவும், நிதி மற்றும் மனிதவள தணிக்கைகளை நிறைவு செய்யவும் மற்றும் ஒக்டோபர் 2023 இறுதிக்குள் முழு மறுசீரமைப்பு செயல்முறையையும் முழுமைப்படுத்தவும் அனுமதி பெற்றுத்தரப்படும் என அவர் கூறியுள்ளார். (ம-7,9)

# முன்னாள் சட்டமா அதிபரை ரி.ஐ.டி யில் ஆஜராக அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை, பயங்கரவாத புலனாய்வு பிரிவுக்கு (TID) இன்று ஆஜராகுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் சட்டமா அதிபர் ஓய்வுபெறும் தினத்தில் வெளியிட்ட கருத்து தொடர்பில் பிரச்சினை உள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச கருத்து தெரிவித்துள்ள நிலையில்,

அவரது சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை பெறவே முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பயங்கரவாத புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார். (ம-7,9)

# ஆட்டோ விபத்து;சிறுவன் பலி


(கொழும்பு)

மீகொட - கொடகம சந்தியில் மூன்று முச்சக்கரவண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் மூன்றரை வயது சிறுவனொருவன் உயிரிழந்துள்ளதாக மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 1.30 அளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டி ஒன்று மற்றுமொரு முச்சக்கரவண்டியை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர் திசையில் வந்த முச்சக்கரவண்டியுடன் மோதி, கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது. (ம-7,9)

# மரண அறிவித்தல்



## நாகமணி சின்னத்துரை

கனகசபை வீதி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சின்னத்துரை நேற்று (18.04.2023) காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - சூசாணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நல்லதம்பி, சின்னையா, நடேசு, நாகேஸ்வரி மற்றும் வேலாயுதம், நாகம்மா, சரஸ்வதி, காந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கமலம், மகேஸ்வரி, யோகரட்ணம், சின்னம்மா, நாகேஸ்வரி, இராசேந்திரம், கந்தசாமி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் றஜிதா, தர்சினி, தர்சன்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவகுமார், பவநேசன், கிரிஜா ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் பிருந்தி, பிரணாவ், செபினா, சேரோன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலியானது இன்று புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தலத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்னாரின் பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகசபை வீதி,
மானிப்பாய்.

(C-6384)

குடும்பத்தினர்

# அம்மன்....

தாகவும் அச் சிலை தொடர்பில் எவரும் உரிமை கோராமல் இருப்பதன் காரணமாகவும் அந்தச் சிலையை அங்கிருந்து அகற்றுவதற்கு கட்டளை யிடுமாறு யாழ்ப்பாணப் பொலிஸார் யாழ்.நீதவான் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இம்மனு மீதான விசாரணை நேற்று (18) யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதி அ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இதன்போது அம்மன் சிலையை அங்கிருந்து அகற்றக்கூடாது எனக் கோரும் பொருட்டு இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ்.நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இவர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உட்பட பத்து சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்; யாழ்.பண்ணைச் சுற்றுவட்டத்தில் உரிமை கோரப்படாமல் அமைக்கப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் சிலையை அகற்ற வேண்டும் எனவும் எனவே அச்சிலையை அகற்ற நீதிமன்றம் கட்டளையிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண் டார்.

இதன் போது குறுக்கிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், வீதியின் ஓரத்தில் பிரதிஷ்டை செய்யப்படும் சிலையை அகற்றக்கோரும் அதி காரம் பொலிஸாருக்குக் கிடையாது எனவும் எனவே யாழ்.பொலிஸார் பிரஸ்தாப மனுவைத் தாக்கல் செய்த தன் மூலம் நீதிமன்றத்தை தவறாக வழிப்படுத்த முற்பட்டுள்ளதுடன் பெறு மதியான நேரத்தையும் வீணடித்துள்ள னர்.

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டின் பல்வேறு இடங்களில் புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

ஆனால் அதுபற்றி எந்த மனுவையும் மன்றில் தாக்கல் செய்யாத பொலிஸார், பண்ணைச் சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்றக் கட்டளை யிடுமாறு கோரி மனுத் தாக்கல் செய்த தற்குள் தீய நோக்கம் உண்டு எனவும் கூறினார்.

தொடர்ந்து வாதிட்ட சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா, பொதுமக்களின் முறைப்பாடுகள் எதுவும் பதிவு செய்யப்படாமல், பொலிஸார் எழுந்தமானமாக மனுத்தாக்கல் செய்தமையால் இவ்வழக்கை நீதிமன்றம் முடிவுறுத்த வேண்டும் எனக் கோரினார்.

இதன்போது தொலைபேசி மூலமான முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்ததாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றில் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தொலைபேசி முறைப்பாடுகளுக்காக வழக்குத் தாக்கல் செய்யப் போகிறீர்களா? அப்படியானால் எத்தனை வழக்குகளை நீதிமன்றில் தாக்கல் செய்ய வேண்டியிருக்கும் என கேள்வி எழுப்பினார்.

இதன்போது சிலையை அகற்றும் நோக்கம் தமக்கு இல்லை எனவும் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளுக்கு இடையூறாக அம்மன் சிலை இருப்பதாலேயே மன்றில் மனுத் தாக்கல் செய்ததாகவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றில் தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களை அடுத்து எழுத்துமூல சமர்ப்பணங்களுக்காக எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்து அமைப்புக்களின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான கேசவன் சயந்தன், வி.திருக்குமரன், ஜொனி மதுரநாயகம், த.திவாகர், பு.அபிதன், பு.பானுப்பிரியன், சி.ரிஷிகேசன், ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். (ம)


நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

வெற்று பரல் விற்பனைக்கு உண்டு

(C-6381)

பொதுமுகாமையாளர்

021-2222143



THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிலையம்
பிரான்பற்று வீதி,சங்கானை (பழைய மீன்சந்தை அருகில்)

- ஆண்டு 4 இல் இருந்து மேற்படிப்பு வரை
- சிங்கள,ஆங்கில,கணித, வர்த்தக வகுப்புக்கள்
- வகுப்புக்கள் சிறு குழுக்களாக மட்டும் நடைபெறும்
- அனுமதிகளுக்கு பெற்றோர் வருகை,தொலைபேசி இலக்கம் அவசியம்
- மாணவர்கள் வருகை,படிப்பு,ஒழுக்கம் பெற்றோருக்கு தவறாது அறிவிக்கப்படும்.

(15294)

நிர்வாகி
த.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்

0776751649


# கண்ணீர் அஞ்சலி



டச்சு றோட், உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சமிக்கல் டஸ்மன்

மண்ணில் 24.10.1992
விண்ணில் 15.04.2023

எமது சங்கத்தின் அங்கத்தவரான அமரர் **சமிக்கல் டஸ்மன்** அவர்கள் 15.04.2023ஆம் திகதி மரணமடைந்துள்ளார். இவரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;- **அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள்**

(C-6382)

**சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டையும் தலைமன்னாரையும் இணைத்து கடலுக்கடியில் சுரங்கப்பாதை அமைக்க வேண்டும்

## மோடியிடம் கோரிக்கை

**(கொழும்பு)**

**தமிழ்நாட்டையும் இலங்கையின் தலைமன்னாரையும் இணைக்கும் வகையில் கடலுக்கடியில் சுரங்கப்பாதை அமைக்க வேண்டும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுக்கப்ப ட்டுள்ளது.**

திமுக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுரங்கப்பாதை கடலுக்கு அடியில் தமிழ்நாட்டின் தென்பகுதியையும் இலங்கையின் தலைமன்னாரையும் இணைக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

மேலும், பொருளாதார ரீதியில் இந்தியாவை மற்றும் இலங்கையை சாலை மூலம் இணைப்பதன் பயன் மிகப் பெரியதாகும் எனவும் இந்தியா, இலங்கையில் வாழும் மக்கள் இதன்மூலம் பாரிய நன்மையடைவார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

மின்சார விநியோகம், பெற்றோலிய உற்பத்தி மற்றும் எரிபொருள் வழங்கல், விநியோகம், தபால் சேவை மற்றும் சுகாதார சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் ஈ.எம். எஸ். பி ஏக்கநாயகவின் கையொப்பத்துடன் இந்த வர்த் தமானி அறிவிப்பு வெளியிட ப்பட்டுள்ளது.

மக்களின் பொதுவாழ்க்கையை பேணுவதற்கு உரிய நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் இன்றியமையாதவை என்பதால் அந்த சேவைகளில் தடையோ அல்லது இடையூறுகளோ ஏற்படக்கூடும் என்பதை கருத்தில் கொண்டே அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# தேசிய அரசாங்கத்தை அமைக்கும் எண்ணம் இல்லை- மகிந்த அமரவீர

(கொழும்பு)



தேசிய அரசாங்கத்தை அமைக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தை அமைப்பது குறித்து ஜனாதிபதியோ அமைச்சரவையோ இதுவரையில் எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை எனவும் இது குறித்து கலந்துரையாடல் கூட இடம்பெறவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

# உதிரிப் பாகங்கள் இல்லாததால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விமானங்கள்

(கொழும்பு)

எஞ்சின் மற்றும் உதிரிப் பாகங்கள் இல்லாத காரணத்தால், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான 5 விமானங்கள் பல மாதங்களாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் விமான சேவைக்கு பாரிய நட்டம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார். (நி)

# அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு அடுத்த வாரமும் தொடரும்- எரிசக்தி அமைச்சு

(கொழும்பு)

புத்தாண்டை முன்னிட்டு அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீட்டை அடுத்த வாரத்திலும் தொடர எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, அதிகரிக்கப்பட்ட ஒதுக்கீடு புதுப்பிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி சானக்க தெரிவித்தார்.

எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்ட நாட்களின், நுகர்வு உள்ளிட்ட புள்ளிவிபரங்களை ஆராய்ந்த பின்னர், அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீட்டை தொடர்வதா என்பது குறித்து எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, கடந்த 4 ஆம் திகதி நள்ளிரவு முதல், வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கம் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## காலிமுகத்திடலில்

# அரசியல் கூட்டங்கள், இசை நிகழ்வுகள் நடத்த அனுமதி இல்லை- அரசாங்கம்

(கொழும்பு)

கொழும்பு - காலிமுகத்திடலை பொதுமக்கள் இடையூறு இன்றி நேரத்தை செலவிடும் இடமாக மாத்திரம் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில், காலி முகத்திடலில் சமய நிகழ்வுகள் தவிர்ந்த எந்தவொரு இசை நிகழ்வுகள், அரசியல் கூட்டங்கள் அல்லது பிற ஒன்றுகூடலுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை 220 மில்லியன் செலவில் காலிமுகத்திடலை அபிவிருத்தி செய்யும் பணியை இலங்கை துறைமுக அதிகாரசபை முன்னெடுத்துள்ளதாகவும் அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் காலிமுகத் திடலில் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் காலி முகத்திடலுக்கு ஏற்பட்ட சேதங்களைத் தொடர்ந்து புனரமைப்புக்காக 6.6 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மக்கள் அதிகளவில் கூடினால் காலிமுகத்திடலின் அழகைப் பேண முடியாத நிலை ஏற்படும் என்பதால் நாளை முதல் சமய நிகழ்வுகளுக்கு மாத்திரம் காலிமுகத்திடலைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

# இந்திய- இலங்கை கப்பல் சேவையை முன்னெடுப்பதில் மேலும் தாமதம்

(கொழும்பு)

இந்தியாவின் காரைக்காலுக்கும் யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பல் சேவையை முன்னெடுப்பதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் சேவையை எதிர்வரும் மே மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளதாக IndSri Ferry Service நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக குறித்த கப்பல் சேவை மார்ச் மாதத்தில் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

பின்னர், துறைமுக உட்கட்டமைப்பு உள்ளிட்ட காரணங்களால், அதனை இந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தியாவின் சில அனுமதிகள் கிடைக்கப்பெறாமையினால் குறித்த கப்பல் சேவையை எதிர்வரும் மே மாத நடுப்பகுதியில் இருந்து முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

150 பயணிகள் இந்த கப்பல் சேவையில் ஒரே தடவையில் பயணிக்க முடியும் என்பதுடன் 50 அமெரிக்க டொலர், ஒரு வழி கட்டணமாக அறவிடப்படவுள்ளது. (நி)

# கட்டுப்பாட்டு விலையின் கீழ் முட்டைகளை விற்பனை செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் முதலாம் திகதி முதல் கட்டுப்பாட்டு விலையின் கீழ் முட்டைகளை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் இதன் விலை மேலும் குறையலாம் எனவும், இதற்கமைய டிசெம்பர் மாதத்திற்குள் முட்டையை 25 முதல் 30 ரூபாய் வரையில் கொள்வனவு செய்ய முடியும் எனவும் அதன் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, பண்டிகைக் காலத்தில் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த 700 விற்பனையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி)

# இளஞ்சிவப்பு நிற சுண்ணாம்பில் புற்றுநோயை உண்டாக்கும் சேர்மானம்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

வெற்றிலையோடு பயன்படுத்தப்படும் இளஞ்சிவப்பு நிற சுண்ணாம்பில் 'ரோடமைன் பி என்ற புற்றுநோயை உண்டாக்கும் சேர்மம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு, நாடளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளில் இருந்து பெறப்பட்ட 48 வெற்றிலை பொதி மாதிரிகளை ஆய்வுக்கு உட்படுத்தியது.

இந்த நிலையில் இளஞ்சிவப்பு நிற சுண்ணாம்பில் புற்று நோயை உண்டாக்கும் இரசாயனம் அதிகம் உள்ளதாக தெரியவந்துள்ளது.


ரோடமைன் பி என்பது ஆடை மற்றும் காகித அச்சிடும் தொழில்களில் நிறமியாகப் பயன்படுத்தப்படும் ஒரு பொருளாகும் எனத் தெரியவருகிறது.

மேலும் இது களைக் கொல்லிகளை நிறமாற்றம் செய்யப் பயன்படுத்தப்படும் செயற்கை சாய இரசாயனமாகும்.

எனவே, உண்ணக்கூடிய சுண்ணாம்பில் நிறத்தை மாற்ற இது போன்ற இரசாயனத்தைப் பயன்படுத்துவது கடுமையான சமூகக் குற்றம் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விறுவிறுப்பான போட்டியில் பெங்களூரை வீழ்த்தியது சென்னை



ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் இன்று பெங்களூரு சின்னசாமி ஸ்டேடியத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியுடன், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மோதியது.

டாஸ் வென்ற பெங்களூரு அணி பீல்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 226 ஓட்டங்களைக் குவித்தது.

தொடக்க வீரர் டேவன் கான்வே அதிரடியாக ஆடி அரை சதம் கடந்தார். அவர் 83 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ஷிவம் துபே 52ஓட்டங்கள் விளாசினார். ரகானே 37 ஓட்டங்களில் அவுட்டானார். பெங்களூரு சார்பில் முகமது சிராஜ், வாய்னே பார்னெல், விஜயகுமார் வைஷாக், ஹசரங்கா, ஹர்ஷல் பட்டேல், மேக்ஸ்வெல் தலா ஒரு விக்கெட் எடுத்தனர்.

இதையடுத்து 227 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பெங்களூர் அணி களமிறங்கியது. அந்த அணியின் கிளென் மேக்ஸ்வெல், டு பிளசிஸ் அதிரடியில் மிரட்டினர். மேக்ஸ்வெல் 36 பந்தில் 76 ஓட்டங்களும், டு பிளசிஸ் 33 பந்தில் 62 ஓட்டங்களும் எடுத்தனர்.

தினேஷ் கார்த்திக் 28 ஓட்டங்களில் அவுட்டானார். இறுதியில், பெங்களூர் அணி 8 விக்கெட்டுக்கு 218 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 8 ஓட்டங்கள் வித்தியா சத்தில் சென்னை அணி அபார வெற்றி பெற்றது.

சென்னை அணி சார்பில் துஷார் தேஷ்பாண்டே 3 விக்கெட் வீழ்த்தினார். (4)

## 2 ஆவது முறையாகவும் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இரண்டாவது முறையாக இடம்பெற உள்ளது என யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் ந.செந்தூரன் தெரிவித்தார்.

இலங்கையிலே யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக குறித்த போட்டி சிறப்பாக நடைபெறவுள்ளது.

இலங்கையில் உள்ள ஒன்பது பிரதேசங்களை சேர்ந்த வீரர்கள் குறித்த போட்டியில் பங்குபற்ற உள்ளனர்.

இதன் பிரதான நோக்கம் கழகங்களில் உள்ள சிறந்த வீரர்களை விளையாட்டில் ஈடுபடுத்துதல் மற்றும் பாடசாலை ரீதியாக தேசிய மட்டத்தில் பங்குபற்றி வெற்றி பெற்ற மற்றும் தோல்வி பெற்ற அணிகளையும் குறித்த கரப்பந்தாட்ட போட்டியில் இணைத்து அவர்கள் ஆற்றலை வெளிக் கொண்டு வரும் நிகழ்வாக குறித்த கரப் பந்தாட்ட போட்டி இடம் பெற உள்ளது.

இது மாத்திரமன்றி பெண்கள் அணியும் இதில் இணைத்துக் கொள்ள விரும்புகின்றோம் என மேலும் தெரிவித்தார். (4-33)



## facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2812

யுவாரகா




சிவர்சன்




சாஜுஜா




இந்துஜா




சிந்துஜன்




சதீஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்னை பூபதியின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்காக அகிம்சை வழியில் போராடி தன்னுயிரினை ஈகம் செய்த தியாகத்தாய் அன்னை பூபதி அம்மாவின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று நல்லூரடியில் உள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

அன்னை ஈகைச் சாவினைத் தழுவிக்கொண்ட நேரமான காலை 8.45 மணி முதல் தியாகத்தாயின் உருவப்படத்திற்கு பொது மக்கள் மலரஞ்சலி செலுத்த முடியும். அதனைத் தொடர்ந்து இறுதி நினைவேந்தல் நிகழ்வு மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இவ் நினைவேந்தலில் ஈகைச்சுடரினை தியாகத்தாய் அன்னை பூபதியின் பேர்த்தி ஏற்றிவைப்பார்.

அனைவரையும் இவ் அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றுமாறு ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (4-33)

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 - 03 - 1947

மறைவு 16 - 04 - 2023

### திருமதி. கனகசபாபதி பரமேஸ்வரி

(சிவா ஸ்ரோர்ஸ், முத்து ஐயன் கட்டு)

காரைநகர் இராசாந் தோட்டத்தை பிறப்பிடமாகவும் முத்து ஐயன் கட்டு, புதுறோட், நீலிப்பந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி பரமேஸ்வரி அவர்கள் கடந்த 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரமு ஆறுமுகம் சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் கனகசபாபதியின் அன்பு மனைவியும், சிவானந்தன், காலஞ்சென்ற பரமானந்தன், கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயும், சாந்தி, கமலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் நிது, ஆர்த்தி, ஆரதி, அனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.04.2023 நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (சி-6379)

நீலிப்பந்தனை,
காரைநகர்.

குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு- 077 959 0440

## 10ஆம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம் 16 • 09 • 1981

மறைவு 19 • 04 • 2013

### மகாதேவன் சதீஷ்குமார்

(லண்டன்)



உங்களின் இழப்பை
எம்மால் ஏற்க முடியவில்லையே
அன்பென்ற ஒற்றைச் சொல்லால்
எம்மை எல்லாம் கட்டுப்படுத்திய
உங்கள் நினைவுகள்
எம் உடலில் உயிருள்ளவரை
மறக்க முடியாதது.
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை தினம்
இறைஞ்சுகின்றோம். (சி-6380)

வல்லை வீதி,
தொண்டைமானாறு.

மகாதேவன்
குடும்பத்தினர்

## இராசிபலன்

19.04.2023
சித்திரை 06, புதன்கிழமை,
சதுர்த்தசி முற்பகல் 11.44 மணிவரை

ரேவதி பின்னிரவு 12.22 மணிவரை
சுபநேரம் -4.32-6.02 மணிவரை
இராகுகாலம்-12.02-1.32 மணிவரை

அமாவாசை விரதம்,
சந்திராஷ்டமம் -
மகம், பூரம்.

வளவன்

**மேஷம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் பலன் தரும்.

**கடகம்** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தேக நலனில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும்.

**துலாம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், மறைமுக எதிர்ப்புக்கள் விலகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், வழிபாடு சிறப்பினைத் தரும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**ரிஷபம்** புதிய நபர்களின் அறிமுகத்தால் நன்மையுண்டு, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கும்பம்** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அரசு வழியில் அனுகூலமுண்டு, உடல் நலன் சீராகும்.

**கன்னி** பொறுமையால் பெருமைகள் வந்து சேரலாம், விரும்பிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பெரிய நன்மையுண்டு.


**தனுசு** தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், உறவினர் வழியில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**மீனம்** திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், நீங்கள் எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம்.

நல்ல யோசனையைக் கேட்காதவர்கள் துன்பம் அடைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் சிலையை உடைக்க முயற்சி



(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் ஆலயத்தின் முகப்பில் உள்ள பிள்ளையார் சிலை காடையர்களால் உடைத்து எடுத்துச் செல்வதற்கான முயற்சி நேற்று முன்தினம் இடம்பெற்றிருக்கிறது.

பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் கோயில் ஆலயத்தின் முகப்பில் உள்ள பிள்ளையார் சிலை உண்டியலுடன் காணப்படுகிறது.

இந்நிலையில் நேற்று காலை அடியவர் ஒருவர் குறித்த சிலையை வழிபட்ட போது பிள்ளையார் சிலையின் கால் பகுதி உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்துள்ளார்.

இந்த சிலையும், அமைக்கப்பட்டிருக்கும் பீடமும் கம்பிகளால் பிணைக்கப்பட்டுள்ளதால் சிலையை அப்புறப்படுத்தும் முயற்சி கைகூடவில்லை என அடியார்கள் சிலர் தெரிவிக்கின்றனர். (4-104)

# கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2023 ஆம் ஆண்டுக்கான ஒரு வருட கால முழு நேர 21 கற்கை நெறிகள் 21 ஆம் திகதி கைதடி மற்றும் காரைநகர் பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்க வுள்ளன.

காய்ச்சி இணைப்பவர் (Welder), தொழிற்சாலை மின்னிணைப்பாளர் (Industrial Electrician), கட்டட நிர்மான உதவியாளர் (Construction Craftsman) மற்றும் மரவேலை தொழில்நுட்பவியலாளர் (Wood craftsman) போன்ற கற்கைநெறிகளிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன. இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ-4) சான்றிதழுக்கான பயிற்சி நெறிகளாகும்.

கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் அல்லது எமது கைதடி மற்றும் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949, 021 221 1793, 021 205 7047 மற்றும் 077 7161 955 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் என தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (4)

# கால்நடைகளுக்கு காதடையாளம் இடல்

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாடுகளுக்கு 2023 ஆம் ஆண்டுக்கான காதடையாளம் இடும் பணி ஊர்காவற்றுறை கால்நடை வைத்திய அலுவலகத்தால் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம்ஜூலை மாதம் 12 ஆம் திகதி வரை இப்பணி இடம்பெறவுள்ளது.

அந்த வகையில், ஏப்ரல் 19 - அனலைதீவு ஜே-37,38, ஏப்ரல்26-எழுவைதீவு ஜே-39, மே 17 - ஊர்காவற்றுறை ஜே-49, பருத்தியடைப்பு ஜே-50, மே 24 - கரம்பொன் ஜே-51, கரம்பொன் கிழக்கு ஜே-52, ஜூன் 07 - கரம்பொன் தென் கிழக்கு ஜே-53, கரம்பொன் மேற்கு ஜே-54, ஜூன் 14 - நாரந்தனை வடக்கு ஜே-55, ஜூன் 21 -நாரந்தனை தென்மேற்கு ஜே-56, நாரந்தனை ஜே-57, ஜூன் 28 - நாரந்தனை தெற்கு ஜே-58, ஜூலை 05 - சுருவில் ஜே-59, ஜூலை 12 - புளியங்கூடல் ஜே-60 ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

குறிப்பிட்ட தினத்தில் மட்டுமே குறித்த இடங்களில் காதடையாளம் இடப்படும். மேலதிக தினங்கள் ஒதுக்கப்படாது என கால்நடை வைத்திய நிலையம் தெரிவித்துள்ளது. மேற்படி காலங்களில் தமது கால்நடைகளுக்கு காதடையாளம் இட்டுக் கொள்ளுமாறு கால்நடை வைத்திய அலுவலகம் கேட்டுக் கொண்டுள்ளது. (4)

# திருமுறை மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)
வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகம், திருநாவுக்கரசு நாயனார் குருபூசையினையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டும் மனனம் செய்யும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கிலும் மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

பாலர் வகுப்பு தரம் 1, 2, 3 மாணவர்களுக்கு இப்போட்டி இடம்பெறவுள்ளது. பாலர் வகுப்பு தரம் 1, 2 இற்கு சொற்றுணை வேதியன். மாசில் வீணையும் ஆகிய இரு திருமுறைகளும் தரம் 3 இற்கு இல்லக விளக்கது, அன்னம் பாலிக்கும் ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்து ஒப்புவித்தல் வேண்டும்.

இப்போட்டிஎதிர்வரும்29 ஆம் திகதி சனிக்கிழமை பாலர் வகுப்பு தரம் 1 மாணவர்களுக்கு பி.ப 1.30 மணிக்கும் தரம்2மாணவர்களுக்கு30ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் தரம் 3 மாணவர்களுக்கு பி.ப 2 மணிக்கும் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதிஎதிர்வரும்28ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும். போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் முதல்15 இடங்களை பெறுபவர்களுக்கு சிறப்பு பரிசில்களும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதி திருநாவுக்கரசு நாயனார் குருபூசையன்று வழங்கப்படும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82(144) நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பி.ப 3 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொண்டு (021 790 4790) மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சைச் செயலர் சு.சிறிகாந்தன் தெரிவித்துள்ளார். (4)

# நாவற்குழியில் மருத்துவ கழிவுகளை எரிக்க பொதுமக்கள் எதிர்ப்பு

(சாவகச்சேரி)
தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி மேற்கு ஜே/294 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சிவபூமி அறக்கட்டளைக்கு சொந்தமான காணியில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் கழிவுகள் மற்றும் மனித அவயங்களை எரிப்பதற்கான எரியூட்டியை அமைப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டாம் என நாவற்குழி மேற்கு மக்கள் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

மேற்படி நாவற்குழி மேற்கில் அமைந்துள்ள சிவபூமி காணியில் எரியூட்டி அமைப்பதற்கான அனுமதியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் யாழ்.போதனா வைத்திய சாலை நிர்வாகம் கோரியுள்ளது.

எரியூட்டி அமைக்கப்பட உள்ள காணி, குடியிருப்புக்களை அண்மித்த காணியாக இருப்பதோடு, காணியின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் வயல் நிலங்களாகவும் தெற்கு பகுதி மீனவர்கள் பயன்படுத்தும் பரவைக் கடலாகவும் காணப்படுகிறது.

இந்தச் சூழலில் ஆலயங்கள், குளங்கள் மற்றும் குடிநீர் கிணறுகள் காணப்படுகின்றன. எனவே எரிகூடம் அமைத்து பயன்படுத்தும் போது நிலத்தடி நீர் மாசுபடும் அதே வேளையில் போதிய கண்காணிப்பு இல்லாத பட்சத்தில் வைத்திய சாலைக் கழிவுகள் குடியிருப்புக்களுக்கு வரக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

மேலும் கழிவுகளை குடியிருப்புக்கள்,ஆலயங்களை தாண்டியே மேற்படி காணிக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இதனால் பொதுமக்கள் மன உளைச்சலுக்கு ஆளாக நேரிடும்.

அத்துடன் சோழகக்காற்று மற்றும் திசைக் காற்று ஆகியன வீசும் போது எரிகூடத்தில் இருந்து வெளிவரும் மாசுக்காற்று காரணமாக சுற்றுச்சூழல் பாதிப்படைவதோடு நோய் நொடிகள் ஏற்படக்கூடும் எனவும் மக்கள் அஞ்சுகின்றனர்.

எமது குடியிருப்புப் பகுதியில் எரியூட்டியை அமைத்து எமது வாழ்வியலைக் குழப்ப வேண்டாம் என மேலும் அவர்கள் தமது கோரிக்கைக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

அத்துடன் கடிதப் பிரதிகளை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோருக்கும் கிராம மக்கள் பலரும் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளனர். (4-30)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி. கந்தலீலா -இரவீந்திரன்
அவர்களின் அன்பு மாமியார்

அமரர். திருமதி
**வயிரவப்பிள்ளை-சற்குணம்**

அவர்கள் 17.04.2023 அன்று
காலமானதையிட்டு
அன்னாரின் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



(A-6378)

தோற்றம் - 14.08.1936 மறைவு - 17.04.2023

ஆசிரியர் கழகம், யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.





கொழும்பு தமிழ்ச்சங்கத்தினரால் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் கடந்த 26 ஆம் திகதி நடத்தப்பட்டது. இதன்போது மெண்டலின் வாத்தியத்தினை அறிமுகமாக்கி கலைஞர்களை உருவாக்கிய திருமதி. கோகிலவனி விஜயராகவனிற்கு கொழும்பு தமிழ்ச்சங்க சின்னம் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மக்களை அடிப்படையாகக் கொண்டது

## விஜயதாச ராஜபக்ச

(கொழும்பு)
உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மக்களை அடிப்படையாகக் கொண்ட முற்போக்கானது என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பல முன்னணி சட்டத்தரணிகளின் ஆலோசனைகளை உள்வாங்கி பொதுமக்களை பாதுகாப்பதற்காக இதனை உருவாக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உலகின் ஏனைய நாடுகளில் காணப்படும் சட்டங்களை அடிப்படையாக வைத்து உத்தேச பயங்கரவாத தடைச்சட்டங்களை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பலவற்றை உத்தேச சட்டம் நீக்குகின்றது.

பொதுமக்களை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளே உத்தேச சட்டத்தில் காணப்படுகின்றன.

எதிர்கால அரசாங்கங்களை வலுப்படுத்தும் நோக்கத்தில் எந்த ஏற்பாடுகளும் உத்தேச சட்டத்தில் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-14 ஆஸ்பத்திரி வீதி 634, 636, 640 ,6401/1, 640/1, ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப் பதிவேட்டில் S.மருசலின் என்ற பெயரில் காணப்படுகின்றது.

தியோ சுஜறாஜ் உம் பெண் கரோலின், கொஸ்களின் ஒஸ்கார் சஞ்சய் அன்ரனி, கார்மலின் அன்ரனி, கிளறென்ஸ் பாக்கியநாதன் குறித்த ஆதனத்தை ஜெகநாதன் வைலொற் ஜெபமலருக்கு 08.06.2019 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இரட்ணம் இரகுராஜா முகதாவில் 10337 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் வழங்கியுள்ளார்.

மருசலின் விக்ரர் ஜெகநாதன் மறுபெயர் மருசலின் ஜெகநாதன் குறித்த ஆதனத்தை 20.06.2019 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இரட்ணம் இரகுராஜா முகதாவில் 10352 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி அற்றோனித் தத்துவக்காரர் சின்னத்துரை ஜெயராஜா மூலம் ஜெகநாதன் வைலொற் ஜெபமலருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை சின்னத்துரை ஜெயராஜா அற்றோனிக் தத்துவக்காரர் மூலம் 07.04.2021 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இரட்ணம் இரகுராஜா முகதாவில் 11328 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை மூலம் மருசலின் விக்ரர் ஜெகநாதன் மறுபெயர் மருசலின் ஜெகநாதனுக்கு வழங்கியுள்ளார்கள்.

குறித்த ஆதனத்தை மருசலின் விக்ரர் ஜெகநாதன் மறுபெயர் மருசலின் ஜெகநாதன் மூலம் 19.10.2021 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ரட்ணம் ரகுராஜா முகதாவில் 11580 ஆம் இலக்கத்தில் நிலஅளவை வெளிப்படுத்தல் உறுதியை நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்ட யாழ்ப்பாணப்பகுதி. வண்ணார்பண்ணை கிழக்கு இறை "கழுத்தறுத்தானும் தாதா கந்தளான்" ஆஸ்பத்திரி வீதி, வண்ணார் பண்ணை கிழக்கு யாழ். மாநகரசபைக்குட்பட்ட J /73 கிராமசேவையாளர் பிரிவு

1) நிலப்பரப்பு 00 குளி 06.29
கிழக்கு - lot 5
வடக்கு - lots 5 1,4,6 2642 ஆம் இலக்கத்தின்படி
தெற்கு - பொ.நாகலிங்கம் சுப்பையா.
மேற்கு - lot 1 சுப்பையா வீரசிங்கம்.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கிழக்கு இறை "கழுத்தறுத்தானும் தாதா கந்தளான்" ஆஸ்பத்திரி வீதி, வண்ணார் பண்ணை கிழக்கு யாழ். மாநகரசபைக்குட்பட்ட J/73 கிராமசேவையாளர் பிரிவு

2) நில. பரப்பு 01 குளி 06
கிழக்கு - ந.பொன்னருக்கும் பங்காளருக்கும்
வடக்கு - வீதி
மேற்கு - சு.வீரசிங்கத்தின் ஆதனம்
தெற்கு - பொ.நாகலிங்கத்திற்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கிழக்கு இறை "கழுத்தறுத்தானும் த்ரதா கந்தளான்" ஆஸ்பத்திரி வீதி, வண்ணார் பண்ணை கிழக்கு யாழ்.மாநகரசபைக்குட்பட்ட J/73 கிராமசேவையாளர் பிரிவு

3) நிலப்பரப்பு 1 குளி 0.6
கிழக்கு - பரஞ்சோதி மேரி மக்டலின் கைம்பெண் பரஞ்சோதி மறுபெயருக்குரிய ஆதனம்
வடக்கு - வீதி.
தெற்கு - பொ.நாகலிங்கமும் பங்காளரும்.
மேற்கு - சு.வீரசிங்கம்.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம்,யாழ்ப்பாணப்பகுதி, வண்னார்பண்ணை கிழக்கு இறை "கழுத்தறுத்தானும் தாதா கந்தள்ான்" ஆஸ்பத்திரி வீதி வண்ணார் பண்ணை கிழக்கு யாழ். மாநகர சபைக்குட்பட்ட J/73 கிராமசேவையாளர் பிரிவு

4) நிலப்பரப்பு 2 குளி 10.60
கிழக்கு - A.பற்றிசயராணி.
வடக்கு - ஆஸ்பத்திரி வீதி.
மேற்கு - சு.வீரசிங்கம்
தெற்கு - பொ.நாகலிங்கம்

தற்போது ஜெகநாதன் வைலொற் ஜெபமலர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஜெகநாதன் வைலொற் ஜெபமலர் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வ்ரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-6377)



**யாழ்ப்பாணம், பெரிய மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கௌரவ அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களுக்கு கலாபூஷணம் பரீட் இக்பால் தமிழ் மொழி பெயர்ப்புடன் புனித குர்ஆன் பிரதி ஒன்று வழங்கிய போது எடுத்த படம். அருகில் யாழ்ப்பாணம், பிரதேச செயலாளர் கௌரவ சாம்பசிவம் சுதர்சன் அவர்களும் முன்னாள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட உலமா சபைத் தலைவர் அஷ்ஷேக் A.M.அப்துல் அஸீஸ் மௌலவி (காஸிமியா) அவர்களும், பெரிய மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினருமான B.S.M. சரபுல் அனாம் J.P. அவர்களும் காணப்படுகின்றனர்.**

(15292)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
# ஆதனப் பெயர்மாற்றம்
## 176/3, மூளாய் வீதி, வட்டாரம்-10

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்- 10. மூளாய் வீதியிலுள்ள இல: 176/3 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை ஆறுமுகம் யோகநாதன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மீனாம்பிகை பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 227/06.07.1987 ஆம் இலக்க உறுதியால் கதிரவேலு செல்லையா கைம்பெண் சின்னம்மா ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த ஆறுமுகம் யோகநாதன் காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான யோகநாதன் மகள் நிவேதினி, யோகநாதன் கஜரூபன், றஜீவன் பெண் கிருபாஜினி. கிபாஷகன் பெண் நிசாந்தினி, யோகநாதன் மகள் ஹேமலதா ஆகியவர்களுக்கு முதுசமாக வந்தடைந்தது. குறித்த உறுதியில் குறித்த ஆதனத்திற்குரிய அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடாது 1927 ஆம் ஆண்டு தை மாதம் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி என குறிப்பிடப்பட்டுள்ளது.

யோகநாதன் மகள் ஹேமலதா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2720/20.11.2022 ஆம் இலக்க உறுதியால் குறித்த யோகநாதன் கைம்பெண் தெய்வநாயகியும், யோகநாதன் மகள் நிவேதினியும், யோகநாதன் கஜரூபனும், றஜீவன் பெண் கிருபாஜினியும், கிபாஷகன் பெண் நிசாந்தினியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த யோகநாதன் மகள் ஹேமலதா ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோ்ராதவிடத்து குறித்த ஆதனமானது யோகநாதன் மகள் ஹேமலதா ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(C-6376)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 128

# சொல்லி அடித்த சச்சின்

**சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்.**

இக்குறளின் படி, சொல்லுவது எளிது. சொல்லிய வண்ணம் செயலை செய்யும் ஆற்றல் உடையவர்கள் ஒரு சிலரே. அந்த ஒரு சிலரில் சச்சினும் ஒருவர் என்பதற்கு பின்வரும் சம்பவமே சாட்சியாக எடுத்துக் கொள்ளலாம். 2007 இல் இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையே மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பலத்த ஆரவாரத்திற்கு மத்தியில் தொடங்கியது. டாஸ் வென்ற அவுஸ்திரேலியா, முதலில் பட் செய்து 290 ரன்கள் எடுத்திருந்தது.

291 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு ஆட்டத்தைத் துவங்கியது இந்தியா. ஆட்டத்தின் 24 ஆவது ஓவரை வீச வந்தார் அந்த அணியின் சுழற்பந்துவீச்சாளர் பிராட் ஹாக். அந்த ஓவரின் கடைசி பந்தில் சச்சின் கிளீன் போல்டானார்.

சச்சினை அவுட் செய்த மகிழ்ச்சியில், ஹாக் துள்ளி குதித்து ஆர்ப்பரித்த படியே பெவிலியன் திரும்பிக் கொண்டிருந்த சச்சினை வெறுப்பூட்டினார்.

அதன் பின்னர் வந்தவர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க இந்தியா 243 ரன்கள் எடுத்து தோற்றுப் போனது.

பிராட் ஹாக் எப்பொழுதும் அவுட் செய்தவரிடம் ஆட்டோகிராப் வாங்கும் ஒரு பழக்கத்தை வைத்திருந்தார். அதேபோல் சச்சினை அவுட் ஆக்கியதால், அவரிடம் சென்று ஆட்டோகிராப் வாங்க முடிவு செய்து ஹாக் அவரது அறைக்கு சென்றிருந்தார்.

சச்சின் இடத்தில் நாமாக இருந்திருந்தால் கிரவுண்டில் வெறுப்பூட்டியதற்கு கதவை பூட்டி நாலு சாத்து கூட சாத்தி இருப்போம். ஆனால் சச்சின் புன்னகையோடு அவரை வரவேற்றார். சிறிது நேர உரையாடலுக்கு பின்னர் ஹாக் தனது ஆட்டோகிராப் வாங்கும் பழக்கத்தை பற்றி சச்சினிடம் பேசி அவரிடம் ஆட்டோகிராப் வாங்கிக் கொண்டார்.

சச்சின், ஆட்டோகிராப் விடும்போது சிரித்துக் கொண்டே "This will never happen again hoggy" என்று கூறினார். அதாவது "இந்த வாய்ப்பு மீண்டும் ஒருமுறை அமையாது" என்றார். ஹாக் சிரித்தபடியே அறையை விட்டு வெளியேறினார்.

இந்தச் சம்பவத்திற்கு பின்னர் பல ஆட்டங்களில் நேருக்கு நேர் சந்தித்த பொழுதும் சச்சின் சொன்னபடியே, ஒருமுறை கூட ஹாக் பந்து வீச்சில் அவுட் ஆகவில்லை. ஆட்டோகிராப் வாங்கும் வாய்ப்பும் கிடைக்காமல் போனது.

இந்தச் சம்பவம் மூலமாக, சச்சினிடம் இருந்து நாம், தன்னம்பிக்கை, சவால் விடும் தன்மை, எதிரியிடம் நடந்துகொள்ளும் தன்மை, அமைதி, நிதானம், சொல்வதை முடிக்கும் திறன் போன்ற பல விடயங்களை கற்றுக் கொள்ளலாம்.

இச்சம்பவம் பிராட் ஹாக் எழுதிய சுயசரிதை நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# ஆனையிறவு, உமையாள்புரம் பகுதிகளில் மாணவர்களை ஏற்றாது செல்லும் பேருந்துகள்

## பெற்றோர்கள் ஆதங்கம்

(கண்டாவளை)

கிளிநொச்சி ஏ-9 வீதியின் ஆனையிறவு மற்றும் உமையாள்புரம் ஆகிய பகுதிகளில் இருந்து காலையில் பாடசாலைகளுக்குச் செல்லும் சுமார் 84 வரையான மாணவர்களை காலை வேளையில் பேருந்துகள் ஏற்றிச் செல்லாமையினால் பாடசாலைக்கு செல்வதில் தினமும் சிரமங்களை எதிர்கொள்வதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி ஏ-9 வீதியின் ஆனையிறவு, நாவல்கொட்டியான், தட்டுவன் கொட்டி, உமையாள்புரம் ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 84 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் தினமும் பரந்தன் இந்து மகா வித்தியாலயம், உமையாள்புரம் பாடசாலை, கிளிநொச்சி புனித் பெண்கள் திரைசா கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம் உட்ளிட்ட பாடசாலைகளுக்கு சென்று கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்று வருவதற்கு இலங்கை போக்குவரத்து சபையின் பருவகால சீட்டு களை பெற்றுக் கொண்டிருந்தா லும் குறித்த மாணவர்களை பேருந்துகள் ஏற்றிச் செல்வதில்லை என்றும் மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயத்தில் உரிய தரப்பினர் கவனம் எடுத்து செயற்பட வேண்டுமெனவும் மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். (4-315)

# மேய்ச்சல் தரவைகள் இல்லாததால் போசாக்கு குறைபாட்டுடன் கால்நடைகள்

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை அமைத்து தருவதற்கு இதுவரை எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கமோ அல்லது அரச உயர் அதிகாரிகளோ எடுக்கவில்லை என்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பல்வேறு தேவைகளுக்காக காணிகளை ஒதுக்குகின்ற போதும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை அமைத்து தருவதற்கு மத்திய அரசு, மாகாண அரசு இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

போசாக்கு குறைபாடு காரணமாகவும் கால்நடைகள் நோய் எதிர்ப்பு சக்தி இன்றி மிக வேகமாக நோய்வாய்ப்பட்டு இறக்கின்ற நிலைமையும் காணப்படுகிறது. அண்மையிலே ஏற்பட்ட குளிர் காலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்துள்ளன.

இதற்கான இழப்பீடுகள் கூட இதுவரை முழுமையாக கிடைக்கப் பெறவில்லை. இவ்வாறு கால்நடைகளை கால்நடை பண்ணையாளர்கள் அறுவடை முடிந்த பின்னர் வயல் வெளிகளில் விடும் போது விவசாயிகள் அறுவடை செய்த அடுத்த நிமிடமே வைக்கோலுக்கு தீ வைத்து எரித்து விடுகின்றனர்.

இவ்வாறான நிலையில் கால்நடைகளுக்கு போசாக்கான உணவு இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்குமாக இருந்தால் கால்நடை வளம் அற்றுப் போகின்ற ஒரு மாவட்டமாக கிளிநொச்சி மாவட் டம் எதிர் காலத்தில் அமையக் கூடும் என்றும் தெரிவித்துள்ளனர். (4-315)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 300 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 180 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 350 |
| தக்காளி | 200 | 150 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 150 | 160 | 150 | 250 |
| கரட் | 160 | 200 | 150 | 320 |
| பூசணி | 50 | 70 | 50 | 40 |
| புடோல் | 140 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 300 | 400 | 350 | 300 |
| வெண்டக்காய் | 200 | 150 | 250 | 240 |
| கருணைக் கிழங்கு | 100. | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 200 | 150 | 150 | 120 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 | 400 |
| பீற்றூட் | 120 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 200 | 300 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 400-500 | 800 |
| போஞ்சி | 250 | 200 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 120 | 70-80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | 480 |
| முள்ளங்கி | 50 | 100 | — | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | — | 80 |
| வல்லாரை | 40 | 25 | 20 | 50 |
| ஈரப்பலா | 100 | — | — | 200 |

# ஊடகக் கல்வியை மேம்படுத்த நூல் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் உயர்தரம் பயிலும் மாணவர்களின் ஊடகக் கல்வியறிவை மேம்படுத்தும் நோக்குடன் வி.என்.மதியமுகன் சொல்லும் செய்திகள் எனும் நூல் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வி.என்.மதியழகன் எழுதிய இப்புத்தகத்தை கனடாவின் CTR 24 வானொலி அச்சிட்டு வழங்கி உள்ளது.

வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக இந்நூலை விநியோகிக்கும் பணியை எழுத்தாளர் வேதநாயகம் தபேந்திரன் மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் ஊடகக் கற்கைகள் பிரிவில் இந்நூல் உசாத்துணை நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) ஆண்டிறுதிப் பரீட்சை-2022
# கணிதம் வினாத்தாள் I


**பகுதி A**

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க.**

(01) வீடு ஒன்றின் ஆண்டுப் பெறுமானம் ரூ.20,000 ஆகும். காலாண்டு இறைவரியாக ரூ.500 ஐ நகர சபை அறவிடுகின்றது. அறவிடப்படும் இறைவரிச் சதவீதத்தைக் காண்க.


(02) $X^2+X-6$ இன் காரணிகளைக் காண்க.

(03) உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப X இன் பெறுமானத்தைக் காண்க.





(04) $5=10^{0.699}$ எனின் lg 5 இன் பெறுமானத்தைக் காண்க.

(05) உருவில் தரப்பட்டுள்ள ABCD என்னும் செவ்வக அடரி லிருந்து BEC என்னும் அரைவட்ட வடிவிலான பகுதி வெட்டி அகற்றப்பட்ட பின் எஞ்சிய அடர் பகுதியின் சுற்றளவானது செவ்வக அடரின் சுற்றளவை விட எவ்வளவு அதிகமாகும் எனக் காண்க.





(06) உருவில் காட்டப்பட்ட தரவுகளுக்கேற்ப $A\hat{O}D=40^\circ$ ஆயின் $O\hat{C}B$ இன் பருமனைக் காண்க.





(07) குறுக்கு வெட்டுப் பரப்பளவு $40cm^2$ ஆகவுள்ள முக்கோண அரியத்தின் நீளம் 20cm ஆகும். அரியத்தின் கனவளவைக் காண்க.

(08) உற்பத்தியினூடாகவும் (2,3) என்னும் புள்ளிக்கூடாகவும் செல்லும் நேர்கோட்டின் படித்திறனைக் கண்டு நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக.

(09) $1+2x\leq3$ எனும் சமனிலியைத் தீர்த்து x பெறக்கூடிய நேர் நிறைவெண் தீர்வுகளை மாத்திரம் கீழே தரப்பட்ட எண் கோட்டில் குறித்துக் காட்டுக.





(10) உருவில் தரப்பட்ட வட்டத்தின் மையம் O ஆகும். OD=6cm ஆயின் BC இன் நீளத்தைக் காண்க.




(11) கீழே தரப்பட்ட அட்சர கணித உறுப்புகள் மூன்றினதும் பொது மடங்குகளுள் சிறயதைக் காண்க.
$6xy, y^2, 2x$

(12) மதில் ஒன்றைக் கட்டுவதற்கு 6 மனிதர்களுக்கு 4 நாட்கள் தேவைப்படுகின்றன. முதல் 2 நாட்களில் 5 மனிதர்கள் இவ்வேலையைச் செய்து முடித்த பின் மிகுதியாகவுள்ள வேலையின் அளவை மனித நாட்களில் காண்க.


(13) உருவில் தரப்பட்டுள்ள வட்டத்தின் மீது A,B,C,D எனும் புள்ளிகள் அமைந்துள்ளன. $A\hat{B}C=100^\circ$ உம் $C\hat{A}B=35O$ உம் ஆகும். $A\hat{D}B$ இன் பருமனைக் காண்க.




(14) ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்ட தரவுகள் அடங்கிய எண் பரம்பலொன்றின் முதலாம் காலணை 8 ஆவது இடத்தில் அமைந்துள்ளது எனின், அப்பரம்பலிலுள்ள தரவுகளின் எண்ணிக்கையைக் காண்க.

(15) கஜன் ரூ.25,000ஐ 8% வருட எளிய வட்டி வழங்கும் வங்கியொன்றில் வைப்பிலிட்டு குறித்த காலத்தின் பின் ரூ. 35,000 ஐ முழுத் தொகையாகப் பெற்றார். அவர் பணத்தை வங்கியில் வைப்பிலிட்டிருந்த காலத்தைக் காண்க.

(16) உருவில் தரப்பட்ட முக்கோணி ABC இல் AB,BC,AC என்னும் பக்கங்களின் நடுப்புள்ளிகள் முறையே F,D,E ஆகும். AB=6cm உம் AC=7cm உம் ஆகும். DEF இன் சுற்றளவு 11 cm ஆகும். BC இன் பெறுமானத்தைக் காண்க.




(17) தீர்க்க. $\frac{7}{2x}-\frac{3}{x}=1$


(18) உருவில் O வை மையமாகவுடைய வட்டத்தின் மீது P,Q,R புள்ளிகள் அமைந்துள்ளன. தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப X இன் பருமனைக் காண்க.




(19) நிமிடமொன்றுக்கு 50 லீற்றர் என்னும் சீரான வீதத்தில் நீர் பாயும் குழாய் ஒன்று 1000 லீற்றர் கொள்ளளவுடைய நீர்தாங்கி ஒன்றிற்கு பொருத்தப்பட்டுள்ளது. தாங்கியில் அரைவாசிக்கு நீர் நிரப்பப்பட்டுள்ள போது குழாய் திறக்கப்படின் தாங்கி முற்றாக நிரப்புவதற்கு எடுக்கும் காலத்தைக் காண்க.

(20) கலவன் பாடசாலையொன்றில் 20 பெண் பிள்ளைகள் உள்ள வகுப்பொன்றிலிருந்து எழுமாறாகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் பெண் பிள்ளையாக இருப்பதற்கான நிகழ்தகவு 4/9 ஆகும். அவ்வகுப்பிலுள்ள மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் காண்க.

(21) உருவில் ABC செங்கோண முக்கோணியாகும். தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப a இன் பெறுமானத்தைக் காண்க.




(22) $A=(-1\ 2)$, $B=\begin{pmatrix}0 & 3\\ 1 & 2\end{pmatrix}$ எனின் தாயம் AB ஐக் காண்க.


(23) அருகில் தரப்பட்ட வென்னுருவில் $A\cap B'$ எனும் தொடையைக் குறிக்கும் பகுதியை நிழற்றிக் காட்டுக.




(24) 27 இன் பெறுமானத்திற்கு மிகவும் கிட்டிய பெறுமானத்தை கீழே தரப்பட்ட விடைகளில் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

(I) 3x1.6 (II) 3x1.7 (III) 3x1.5 (IV) 3x1.8

(25) உருவில் காட்டப்பட்டுள்ள AB என்னும் நேர்கோடு P இலிருந்து 8m தூரத்தில் அமைந்துள்ளது. P இலிருந்து 6m தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கின் ஒரு பகுதி உருவில் காட்டப்பட்டுள்ளது. AB இலிருந்து 4m தூரத்தில் அமைந்துள்ள புள்ளியைக் காண்பதற்கான முறையை தரப்பட்டுள்ள உருவில் பருமட்டாகக் குறித்துக் காட்டுக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி B
### எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.

(01) (a) குறித்த ஒரு நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளில் 2/5 ஐ விற்பனை நிலையம் ஒன்றுக்கு 3/8 ஐ ஏற்றுமதிக்காகவும் ஒதுக்கீடு செய்தது.


(i) விற்பனை நிலையத்திற்கும் ஏற்றுமதிக்காகவும் ஒதுக்கீடு செய்த ஆடைகள் மொத்த ஆடைகளின் எண்ணிக்கையில் என்ன பின்னம் எனக் காண்க.

(ii) எஞ்சிய ஆடைகளில் 1/9 ஐ தனது நிறுவனத்திலேயே விற்பனைக்கு வைத்துக் கொண்டது. அவ்வாறு வைத்துக் கொண்ட ஆடைகளின் பெறுமதி ரூ.7000 ஆயின் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் பெறுமதியைக் காண்க.

(B) மேலே கூறப்பட்ட ஆடைகள் அனைத்தையும் உற்பத்தி செய்வதற்கு 15 தொழிலாளர்களுக்கு 8 நாட்கள் தேவை என கணக்கிடப்பட்டது. எனினும் 3 தொழிலாளர்கள் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதால் எஞ்சிய தொழிலாளர்களைக் கொண்டு அனைத்து ஆடைகளையும் உற்பத்தி செய்வதற்கு, மேலதிகமாக எத்தனை நாட்கள் எடுத்திருக்கும் எனக் காண்க.

(02) உருவில் தரப்பட்டுள்ள அளவீடுகளைக் கொண்ட மெல்லிய தகடு சரிவக வடிவில் அமைந்த ABCD என்னும் தகட்டிலிருந்து 7 cm ஆரையையுடைய ஆரைச்சிறை வடிவிலான ABC எனும் பகுதி வெட்டி அகற்றப்பட்டுள்ள பகுதியாகும். (கீழே தரப்பட்டுள்ள கணித்தல்களுக்காக $\pi = \frac{22}{7}$ எனக் கொள்க)

(i) வில் AC இன் நீளத்தைக் காண்க.




(ii) ஆரைச்சிறை ABC இன் பரப்பளவைக் காண்க.

(iii) ஆரைச்சிறைப் பகுதி நீக்கப்பட்ட பின் எஞ்சிய பகுதியின் பரப்பளவைக் காண்க.

(iv) ஆரைச்சிறைப் பகுதியை வெட்டிய பின் எஞ்சிய பகுதியில் 8 cm நீளமுடைய அடியைக் கொண்ட செங்கோண முக்கோணப் பகுதி மீண்டும் வெட்டப்பட்டது. தற்போது எஞ்சியுள்ள தகட்டின் சுற்றளவைக் காண்க.

(03) (a) வாகன இறக்குமதியின் போது அரசு 40% ஐ தீர்வையாக அறவிடுகின்றது.

(i) இறக்குமதிப் பெறுமானம் ரூ.5,000,000 ஆகவுள்ள வாகன மொன்றை இறக்குமதி செய்யும் போது தீர்வை செலுத்திய பின் அதன் பெறுமதியைக் காண்க.

(ii) தீர்வை செலுத்திய பின் முச்சக்கரவண்டியொன்றின் பெறுமதி ரூ.420,000 ஆகும். மேலே கூறப்பட்ட தீர்வைச் சதவீதம் செலுத்தப்பட்டதெனின், தீர்வைச் செலுத்த முன் முச்சக்கரவண்டியின் பெறுமதியைக் காண்க.


(B) சந்தை விலை ரூ.60 ஆகவுள்ள கம்பனியொன்றின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு காசிம் ரூ.30,000 ஐ முதலீடு செய்தார்.

(i) அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

(ii) காசிம் பங்குகளை கொள்வனவு செய்ததினால் வருட முடிவில் ரூ.10,000 ஐ பங்கு லாபமாகப் பெற்றார் எனின், பங்கு ஒன்றிற்காக அக் கம்பனியால் வழங்கப்பட்ட பங்கு லாபத்தைக் காண்க.

(04) வகுப்பொன்றிலுள்ள 40 மாணவர்கள் பரீட்சை ஒன்றில் பெற்றுக் கொண்ட புள்ளிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட பூரணமற்ற வகுப்பாயிடை அட்டவணையும் அதற்கான வலையுரு வரையமும் உருவில் தரப்பட்டுள்ளது. இங்கு "20-30 என்பது 20 இலும் அதிகம் 30 அல்லது 30 இற்கு சமன்" என்பதாகும். இது போன்ற ஏனைய வகுப்பாயிடைகளும் ஆகும்.

| புள்ளிகள் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 0-10 | ......... |
| 10-20 | 8 |
| 20-30 | .......... |
| 30-50 | 16 |
| | $\sum f = 40$ |




(i) மேலே தரப்பட்ட அட்டவணையில் இடைவெளிகளையும் வலையுரு வரையத்தையும் பூரணப்படுத்துக.

(ii) 20 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்றுக் கொண்ட மாணவர் எண்ணிக்கையைக் காண்க.


(iii) வலையுரு வரையத்தின் மீது மீடிறன் பல்கோணியை வரைக.

(iv) இத்தரவுகளை வட்ட வரைபொன்றில் காட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பின் 30-50 என்னும் வீச்சில் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களைக் குறிக்கும் ஆரைச்சிறைக் கோணத்தின் பருமனைக் காண்க.

(05)

(a) ஒரு காரியாலயத்தில் சேவை புரியும் மேகலா மற்றும் சிபானா எனும் இரு அதிகாரிகள் விடுமுறை கோரும் போது இவ்விருவரில் ஒருவர் கட்டாயம் சேவைக்கு சமுகம் தருதல் வேண்டும் எனும் நியதியிலும் வார நாட்களில் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாளில் மாத்திரம் விடுமுறை வழங்குவதாக அந்நிறுவனத் தலைவர் முடிவு செய்தார்.


(I) மேகலா மற்றும் சிபானாவிற்கு விடுமுறை வழங்கப் படக்கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களையும் காட்டும் மாதிரி வெளியை அருகில் நெய்யரியில் X அடையாளமிடுக.




(ii) சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இருவருக்கும் விடுமுறை வழங்கப்படுகின்றது. சிபானாவுக்கு தொடர்ச்சியாக 3 நாட்கள் விடுமுறை கிடைக்கக்கூடிய நிகழ்ச்சியைச் சுற்றி கட்டமிட்டுக் காட்டி, அதன் நிகழ்தகவைக் காண்க.

(b) (i) பேருந்து ஒன்றில் ஆசனங்கள் அனைத்தும் நிரம்பியிருந்தமையால் நின்று கொண்டு பயணம் செய்த பயணிகளில் 7 பேர் ஆண்களும் 3 பேர் பெண்களும் ஆவர். தரிப்பிடமொன்றில் அமர்ந்திருந்த பயணிகளும் ஒருவருக்கு ஆசனத்தில் அமருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இந்நிகழ்ச்சிக்குரிய நிகழ்வுகளைக் காட்டும் பூரணமற்ற மரவரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.
அடுத்த தரிப்பிடத்தில் அமர்ந்திருந்த பயணிகளுள் ஒருவர் இறங்கினார். அப்போது நின்று கொண்டிருந்த பயணிகளுள் ஆண் ஒருவர் அல்லது பெண் ஒருவர் அமர்வதற்கான நிகழ்ச்சியைக் காட்டும் நிகழ்வுகளைக் குறிப்பதற்கு மரவரிப்படத்தை விரிவுபடுத்துக.

முதலாம் ஆசனம் இரண்டாம் ஆசனம்




(ii) குறைந்தது ஒரு பெண்ணாவது ஆசனங்களில் அமருவதற்கான நிகழ்தகவைக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024



**வரலாற்றில் இடம்பெறும் வித த்தில் வாழ்க்கை நடத்த விரும் பும் சிம்ம இராசி வாசகர்களே!**

தன்னம்பிக்கையும் துணிவும் இருந்தால் இந்தத் தரணியை வெல் லலாம் என்று சொல்லும் உங்களு க்கு சோபகிருதுப் புத்தாண்டு கண்ட கச் சனியின் ஆதிக்கத்தோடு தொடங் குகின்றது. எனவே கொஞ்சம் கவ னத்தோடுதான் செயற்பட வேண் டும். உங்களைப் பொறுத்தவரை 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான வர் சனி. அவர் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார் க்கப் போகின்றார். சனியின் பார்வை யால் சஞ்சலங்களும் தன விரயங் களும் அதிகரிக்கும். கவனத்தோடு செயற்பட்டால் தான் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். மனஅமைதிக் கும் வழியிறக்கும். சோபகிருது தொட ங்கும் பொழுதே அஷ்டமத்தில் குரு பலம் பெறுகின்றார். 7 ஆம் இடத்தில் சனி பகவான் பலம் பெறுகின்றார். ஏப்ரல் 22 ஆம் திகதியன்று வியா ழன் மேஷ இராசிக்குப் பெயர்ச்சியாகி வந்து உங்கள் இராசியைப் பார்க்கப் போகிறார். எனவே குருப்பெயர்ச்சி வரை எதையும் நீங்கள் திட்டமிட்டுச் செய்ய இயலாது. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். உத்தியோக த்தில் இருப்பவர்களுக்கு சக பணியா ளர்களால் தொல்லை வந்து சேரும். இடையில் மூன்று முறை சனி-செவ் வாய் பார்வை ஏற்படுகின்றது. இக் காலத்தில் பிள்ளைகளால் தொல்லை கள் வந்து சேரும். பாகப்பிரிவினை கள் இழுபறி நிலையில் இருக்கும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். 08.10.2023 முதல் மீனத்தில் இராகு வும் கன்னியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இந்த கிரகப் பெயர்ச்சி யின் அடிப்படையில் தான் உங்க ளுக்குப் பலன்கள் வந்து சேரும். உங்கள் சுய ஜாதகத்தில் வலிமை வாய்ந்த திசாபுத்தி நடைபெறுமே யானால் உங்களுடைய எண்ணங் கள் ஓரளவேனும் நிறைவேறும். திசாபுத்தி பலமிழந்து இருந்தால் காரியத் தடைகளும் கண்ணீர் சிந் தும் செயல்களும் வரலாம். அது போன்ற காலங்களில் பாக்கியாதி பதியின் பலம் அறிந்து அதற்குரிய தெய்வங்களை யோக பலம் பெற்ற நாளில்சென்று வழிபட்டு வந்தால் தடை கள் அனைத்தும் தவிடு பொடியாகும்.

**குருப்பெயர்ச்சி!**

சித்திரை 9 ஆம் திகதி (22.4.2023) மேஷத்திற்கு குரு பகவான் வருகின்றார். அப்பொழுது அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவதோடு 3, 5 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. எனவே ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்றார், உறவினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். உடல்நலம் சீராகும். சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினை யும் சொந்தங்களால் ஏற்பட்ட தகராறும் அகலும். வியாழ நோக்கம் செயற் படுவதால் விவாகப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முடியும். வீடு கட்டும் யோகம் அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் முயற்சி கைகூடும். முன்னோர் வழிச் சொத்துக்கள் கைக்கு கிடைத்தாலும் அதை விற்றுவிட்டுப் புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கடந்த ஓராண் டாகவே பண நெருக்கடியில் சிக்கித் தவித்த உங்களுக்கு இப்பொழுது பணப்புழக்கம் சரளமாக அமையப் போகின்றது. குரு பார்வை பலனாக சகோதர ஸ்தானம் வலுப்பெறுவதால் உடன்பிறப்புகளின் திருமணம் சீரும், சிறப்புமாக நடைபெறும். வழக்குகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்தேவை கள் உடனுக்குடன் பூர்த்தியாகும்

**கண்டகச் சனி!**

மாபெரும் கிரகம் என்று வர்ணிக் கப்படும் சனி பகவான். இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் உலா வந்து கொண்டிருந்தார். ஆகையால் என்றாலும், களத்திரஸ்தா னாதிபதி யாக சனி விளங்குவதால் குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். சூடுபிடித்த வியாபாரம் தொய்வு நிலை க்கு வந்து விடும். பாடுபட்டுச் சேர்த்த பணத்தைப் பல வழிகளில் செலவிடப் போகிறீர்கள். உடல்நலத்திலும் உபத்திரம் ஏற்பட்டு கவலைகள் வந்து சேரும். தடபுடலாய் செய்ய நினைத்த காரியம் தடுமாற றத்தில் முடியும்.




**ராகு-கேது பெயர்ச்சி!**

08.10.2023 அன்று மீன இராசி யில் இராகுவும் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இக்காலத்தில் எதைச் செய்தாலும் இறைவழிபாட்டை மேற்கொண்டு அதன்பிறகு காரியத்தை தொடங்கி னால் தான் வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு!**

புத்தாண்டில் அத்தனை காரியங் களும் வெற்றி பெற தேய்பிறை அஷ்டமியன்று துதிப்பாடல்களைப் பாடி பைரவரை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்!**

இந்தப் புத்தாண்டில் வரவும், செல வும் சமமாகும் சூழ்நிலை உண்டு. வாய்ப்புகள் வாசல் தேடி வந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. ஆரோக்கியச் சீர்கேடுக ளும் ரண சிகிச்சையும் ஏற்படலாம். குடும்ப விபரங்களை மூன்றாம் நபரி டம் சொல்ல வேண்டாம். அதே போல உங்கள் முன்னேற்றத்தையும் பிற ரிடம் சொல்வதன் மூலம் பிரச்சினை களைச் சந்திக்க நேரிடும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைக்களை உங்கள் மேற்பார்வை யில் வைத்துக் கொள்ளுங்கள். குருப் பெயர்ச்சிக்குப் பிறகு சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறலாம். உத்தி யோகத்தில் உங்கள் செயற்பாடுகள் மற்றவர்களை ஆச்சரியப்பட வைக் கும். வரவும் செலவும் சமமாகும்.

# புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்!

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

உத்தியோகப் பிரச்சினை, ஊதியப் பிரச்சினை, உடன் இருப்பவர்களால் பிரச்சினை என்று நிம்மதியில்லாத வாழ்க்கை அமைந்திருந்தது. சனி பகவான் ஆண்டு தொடக்கத்தில் இன்னல்களை அதிகரிக்கச் செய்யும் கண்டகச் சனியாக சஞ்சரிக்கிறார். எனவே அதன் கடுமையிலிருந்து விடுபட தெய்வ தரிசனங்கள் உங்களு க்குத் தேவை. கல்யாண முயற்சி கைகூடுவதில் தடைகள் ஏற்படும். உங்களுடைய முன்னேற்றத்தைப் பற்றி முன்னதாகவே யாரிடமேனும் நீங்கள் தெரிவித்தால் அதில் முட்டுக் கட்டைகள் வந்து சேரும். உத்தியோ கத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரி களின் கெடுபிடி அதிகரிக்கும். பிள்ளை கள் தாங்களாகவே முடிவெடுத்து மன திற்கு பிடிக்காத சில காரியங்களைச் செய்யலாம். ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை. கும்ப த்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்கிரமும் பெறுகின்றார். பின்னர் 24.08.2023 முதல் மகரத்திற்கு வந்து, அங்கும் வக்கிரம் பெறுகின்றார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப ராசிக்கு முறையாகப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். இந்த வக்கிர இயக்க காலம் உங்களுக்கு நல்ல வாய்ப்புகளை வழங்கும் "சம்பளம் போதுமானதாக இல் லையே" என்று சிலரும், "பிள்ளை களின் குணம் சரியில்லாமல் போகின் றதே"என்று ஒருசிலரும், "ஆரோக்கி யத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்படுகி றதே" என்று சிலரும் கவலைப்படுவர். குரு பார்வை உங்கள் இராசியில் பதிவதால் காரியங்கள் எப்படியாவது கடைசி நேரத்தில் கைகூடிவரும். அஷ்டமத்து ராகு அலைச்சலுக்கேற்ற ஆதாயத்தைக் கொடுக்காது. எனவே யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை அனுகூலம் தரும் ஸ்தலங்களில் செய்து கொள்வது நல்லது. கேது 3 இல் சஞ்சரிப்பதால் சகோதர சச்சரவுகள் அதிகரிக்கும். ஒற்றுமையாக இருந்த உடன்பிறப்பு கள் இப்பொழுது விலகலாம். வழக்கு கள் உங்களுக்குச் சாதகமாக அமை யுமா என்பது சந்தேகம் தான். இழப்பு களும் விரயங்களும் ஏராளமாக வந்து சேரும். தைரியம், தன்னம்பிக் கையை தக்க வைத்துக்கொள்வது அரிது. "கடன் சுமை கூடிக்கொண்டே செல்கிறதே"என்று கவலைப்படு வீர்கள். ஒரு கடனை அடைக்க மற் றொரு கடன் வாங்கும் சூழல் உருவா கும். தங்கள் கீழ் பணிபுரிபவர்களால் சில பிரச் சினைகளைச் சந்திக்க நேரிடும்.

**குரு-சனியின் வக்கிரம்!**

12.09.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறு கின்றார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான வர் குரு. எனவே பலத்த போட்டிகளு க்கு இடையில் முன்னேற்றம் ஏற்ப டும். பணத்தேவைகள் கடைசி நேரத் தில் தான் பூர்த்தியாகும். "நினை த்தது நிறைவேறவில்லையே" என்று கவலை ப்படுவீர்கள். அனைத்து வழிகளிலும் இடையூறுகள் ஏற்படுவ தோடு, பண விரயங்களையும் அதிக ரிக்கச் செய் யும். பிள்ளைகளை உங்கள் மேற் பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் இடத்தில் மேல திகாரிகளால் அலைக் கழிக்கப்படுவீர் கள். "இடமாற்றம் செய்யலாமா?" என்ற சிந்தனை அதிகரிக்கும். 27.06.2023 முதல் 23.08.2023 வரை கும்ப ராசியில் சனி வக்கிரம் பெறுகின்றார். பிறகு 24.08.2023 முதல் 23.10. 2023 வரை மகரத்தில் வக்கிரம் பெறுகின் றார். இக்காலத்தில் மிகமிக கவனம் தேவை. உத்தியோகத்தில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக் காது. நம்பிச் செய்த காரியங்கள் பாதி யிலேயே நிற்கும். நாணயப் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஆதரவு காட்டுபவர்களின் எண்ணி க்கை குறையலாம். உத்தியோகத் தில் இனிமை தராத இடமாற்றம் வந்து சேரும். தொழிலில் சிலரது குறுக்கீடுகளால் நல்ல வாய்ப்புகள் கை நழுவிச் செல்லும். எதையும் யோசித்துச் செய்ய வேண்டிய நேரமிது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 156





நந்தினி மறுமொழி சொல்லவும் இல்லை. அவனைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. நெஞ்சில் குடிகொண்டிருந்த அருவருப்பையும் பீதியையும் அதேசமயத்தில் பயங்கர சங்கல்பத்தின் உறுதியையும் அவள் முகமண்டலம் காட்டியது. அவளுடைய கரிய கண்களிலிருந்து இரு கண்ணீர்த் துளிகளும் ததும்பி நின்றன.

"பெண்ணே! பேச மாட்டேன் என்கிறாய்! வேண்டாம்! அதையும் நானே சொல்லி விடுகிறேன். அந்த மனிதர்களைப் போலவே நீயும் பழி வாங்கும் விரதம் பூணப் போவதாகச் சொன்னாய். பழி வாங்குவதற்கு அவர்களைக் காட்டிலும் உனக்கே அதிகக் காரணம் உண்டு என்று சத்தியம் செய்தாய். உன்னுடைய அழகையும் மதியையும் அதற்கே பயன்படுத்துவதாகக் கூறினாய்.

அவர்களுக்கு உன்னால் முடிந்த அளவு உதவி புரிவதாகவும் சொன்னாய். சபதத்தை நிறைவேற்றியதும் நீயே உன் உயிரை விட்டு விடத் தீர்மானித்திருப்பதாகவும் ஆணையிட்டுச் சொன்னாய். உன்னை மற்றவர்கள் நம்பவில்லை. ஆனால் நான் நம்பினேன். நம்பி, உன்னைத் தீயில் போட்டு விடாமல் தடுத்தேன். உன் உயிரைத் தப்புவித்தேன். இதெல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்று ரவிதாசன் கூறி நிறுத்தினான்.

நந்தினி சற்றுத் திரும்பி அவனைப் பார்த்து, "ஞாபகம் இருக்கிறதா என்று கேட்கிறாயே? என் நெஞ்சில் அவ்வளவும் தீயினால் எழுதியது போல் எழுதி வைத்திருக்கிறதே?" என்றாள்.

"பின்னர் ஒருநாள் நாம் எல்லோரும் அகண்ட காவேரிக் கரையோரமாகக் காட்டு வழியில் போய்க் கொண்டிருந்தோம். திடீரென்று பின்னால் குதிரை வீரர்கள் வரும் சப்தம் கேட்டது. அவர்கள் போகும் வரையில் நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகக் காட்டில் ஒளிந்து கொள்ளத் தீர்மானித்தோம்.

ஆனால் நீ மட்டும் அத்தீர்மானத்தை மீறி வழியிலேயே நின்றாய். அந்த வீரர்கள் உன்னைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களுடைய தலைவனாகிய பழுவேட்டரையன் உன்னைக் கண்டு மயங்கி உன் மோக வலையில் விழுந்தான். அவனை நீ மணந்தாய். என்னைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் நான் ஏமாந்து விட்டதாக என்னை இடித்துக் கூறினார்கள். நான் உன்னை விடவில்லை. எப்படியோ ஒரு நாள் உன்னைத் தனியே பிடித்துக் கொண்டேன். துரோகியாகிய உன்னைக் கத்தியால் குத்திக் கொன்று விட எண்ணினேன். மறுபடியும் நீ உயிர்ப் பிச்சை கேட்டாய்.

நம்முடைய சபதத்தை நிறைவேற்றுவதற்காகவே இங்கு வந்திருப்பதாகக் கூறினாய். இந்த அரண்மனையில் இருந்தபடியே எங்களுக்கு வேண்டிய உதவியெல்லாம் செய்வதாகச் சத்தியம் செய்தாய். இதெல்லாம் உண்மையா இல்லையா?" என்று கேட்டு விட்டு நிறுத்தினான் ரவிதாசன்.

"இதெல்லாம் உண்மை தான் யார் இல்லை என்றார்கள்? எதற்காகத் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறாய்? இப்போது நீ வந்த காரியத்தைச் சொல்லு!" என்றாள் நந்தினி. "இல்லை, பெண்ணே! உனக்கு ஞாபகம் இல்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## முடிவுகளில் கவனம் தேவை



சீனாவில் ஒரு ஊரில் பத்து விவசாயிகள் இருந்தார்கள். ஒரு நாள் அவர்கள் தத்தம் நிலங்களில் உழவு வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது வானம் இருட்டிக் கொண்டு வந்தது. பயங்கர மின்னலுடன் இடி இடித்தது.

பயந்து போன அவர்கள் பக்கத்தில் இருந்த ஒரு பாழடைந்த மண்டபத்தில் ஓடி ஒளிந்து கொண்டனர்.

வெகுநேரமாகியும் மின்னல் வெட்டுவதும் இடி இடிப்பதும் நிற்கவில்லை. அவற்றின் உக்கிரம் வேறு அதிகரித்துக் கொண்டே போனது.

பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த விவசாயிகளில் ஒருவன் 'நம்மிடையே ஒரு மகா பாவி இருக்கிறான். அவனைக் குறி வைத்துத்தான் கடவுள் இடியையும் மின்னலையும் ஏவியிருக்கிறார். அந்தப் பாவியை வெளியே அனுப்பி விட்டால் மற்றவர்கள் பிழைத்துக் கொள்வார்கள் என்று சொன்னான்.

மற்றவர்கள் இதனை ஆமோதித்தார்கள்.

இத்தனை பேரில் அந்தப் பாவியை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்று விவாதம் நடந்தது. விவாதத்தின் முடிவில் தீர்ப்பைக் கடவுளிடமே விட்டு விடுவது என்று முடிவாயிற்று. அதன் படி அனைவரும் தத்தம் தொப்பிகளைக் கையில் பிடித்துக் கொண்டு தொப்பியை மழையில் நீட்டுவது என்று முடிவாயிற்று. அனைவரும் தத்தம் தொப்பிகளை மழையில் நீட்டினர். பயங்கரமான இடி முழக்கத்துடன் ஒரு மின்னல் வெட்டியது. அதில் ஒரு விவசாயியின் தொப்பி மட்டும் எரிந்து சாம்பலாகியது.

மற்ற ஒன்பது விவசாயிகளும் "இவன்தான் பாவி. இவனை முதலில் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு" என்று கத்திக் கொண்டே அவன் மேல் பாய்ந்தனர்.

அந்த விவசாயி கெஞ்சிக் கதறி தான் அப்பாவி என்று மன்றாடினான். மற்றவர் யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவனை பலவந்தமாகக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினர்.

அவன் கதறிக் கொண்டே மழையில் ஓடினான்.

அப்போது அதி உக்கிரமாக ஒரு மின்னல் தாக்கி இடி இடித்தது. ஓடிக்கொண்டிருந்த விவசாயி அதிர்ச்சியில் உறைந்து நின்று விட்டான். சற்று நேரத்தில் நிலைக்குத் திரும்பி மண்டபத்தைத் திரும்பிப் பார்த்தான்.

மண்டபம் இடி விழுந்து நொறுங்கிக் கிடந்தது. ஒரு புண்ணியவானின் புண்ணிய பலத்தில் தப்பித்திருந்த ஒன்பது விவசாயிகளும் அவனை வெளியே தள்ளிப் பாதுகாப்பை இழந்து பரிதாபமாகக் கருகிச் செத்துப் போய் விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.

– மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதமர் மோடியை பயன்படுத்த தமிழ் அரசியல் தரப்புகள் தவறிவிட்டன

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தமிழ்ப் புத்தாண்டு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது, நான் மட்டுமே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் எனக் கூறியிருந்தார்.

அவர் கூறியது முற்றிலும் உண்மை.

மகாத்மா காந்தியடிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தபோதிலும் அப்போது இந்தியப் பிரதமராக இருந்த நேருவோ அன்றி பின்னாளில் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தியோ யாழ்ப்பாணத்துக்கு ஒரு போதும் வரவில்லை.

இவர்களின் இலங்கைக்கான விஜயம் என்பது கொழும்போடு நின்று போனது.

ஈழத் தமிழர்கள் மீது மிகுந்த அன்பு கொண்டவராக அன்னை இந்திரா காந்தி இருந்தாராயினும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய வேண்டுமென்ற விருப்பம் அவரிடம் ஏற்பட்டிருக்கவில்லை.

ஆனால் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்ததுடன் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்துக்குச் சென்று வழிபாடாற்றியிருந்தமை இங்கு குறித்துரைக்கத்தக்க விடயமாகும்.

மேலும் மன்னார் திருக்கேதீச்சர ஆலயப் புனரமைப்பு, யாழ்ப்பாணம் மத்திய கலாசார நிலையத்தின் நிர்மாணிப்பு, இந்திய வீட்டுத் திட்டம் என்பன வடபகுதி மக்களுக்காக பிரதமர் மோடி அவர்களின் ஆட்சியில் கிடைக்கப் பெற்றன.

இதையும் கடந்து நம் தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்த பிரதமர் மோடி, இந்தியாவை நம்புங்கள். நாங்கள் உங்களைக் கைவிடமாட்டோம் என உறுதிமொழி வழங்கியிருந்தார்.

அத்துடன் தமிழ் அரசியல் தலைவர்களை இந்தியாவுக்கு வாருங்கள் சந்திப்போம் என்றும் அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும் பிரதமர் மோடியின் நல்லெண்ணத்தை – அவர் காட்டிய நட்பை தமிழ் அரசியல் தரப்புகள் தக்கவாறு பயன்படுத்தவில்லை என்பது நிறுதிட்டமானது.

உண்மையில், ஈழத் தமிழ் மக்களுக்கு இந்தியாவால் அவலம் நடந்தது எனில், அது காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது, தமிழகத்தில் கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக வீற்றிருந்தபோது நடந்ததாகும்.

ஆனால் பிரதமர் மோடி பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர். இலங்கையில் நாயன்மார்களின் பாடல் பெற்ற தலங்கள் மீது கருசனை கொண்டவர்.

இலங்கை சிவபூமி என்பதை ஏற்றுக் கொள்பவர்.

நிலைமை இதுவாக இருந்தபோதிலும் பிரதமர் மோடியைச் சந்தித்து நம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நம் தமிழ் அரசியல் தரப்புகள் பின்னடித்தமைக்கு மூல காரணம் என்ன என்பது கண்டறியப்பட வேண்டும்.

ஆனால் இந்தியாவைக் கடந்து நம் தமிழினத்தின் பிரச்சினைக்குத் தீர்வு காண உலகில் வேறு நாடுகள் இல்லை என்பதும் எதிர்காலத்து இந்தியப் பிரதமர் இலங்கை அரசாங்கத்தைக் கடந்து, நம்மோடு நட்புப் பாராட்ட மாட்டார் என்பதும் வெளிப்படையான உண்மை.

ஆக, நானே யாழ்ப்பாணத்துக்கு சென்ற முதல் இந்தியப் பிரதமர் என்று பிரதமர் மோடி அவர்கள் பகிரங்கமாகக் கூறியிருக்கும் இவ்வேளையில், அவரைச் சிக்கனப் பிடித்து எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிப்பதே புத்திசாலித்தனமாகும்.

# பிணையெடுப்புக்கு பின்னரே அதிகரித்த தமிழர்கள் மீதான அடக்குமுறைகள்

## உலகத் தமிழர் அமைப்புக்களின் சம்மேளனம்

(ஒட்டாவா)

சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பிற்குப் பிறகு இலங்கை கலாசார இனப்படுகொலை அதிகரித்துள்ள நிலையில், தமிழர்களின் உரிமைகளுக்கு முன்னுரிமையளிக்குமாறு இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்களையும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியிடத்திலும், உலக தமிழர் அமைப்புக்களின் சம்மேளனம் கோரியுள்ளது.

தமிழர்களுக்கு எதிரான கலாசார, இனப்படுகொலையை இலங்கை திட்டமிட்டு விரிவுபடுத்துவது குறித்து தமிழ் புலம்பெயர்ந்தோர் தீவிரமான அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்கள், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பன, நிதியுதவிக்கு அப்பால், பூர்வீக மக்களின் நில உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கனடாவை மையப்படுத்தும் உலக தமிழர் அமைப்புக்களின் சம்மேளனம் கோரியுள்ளது.

தமிழர்கள் விரும்பத்தகாதவர்கள் என்று கருதுவதன் மூலம், இலங்கை அரசாங்கங்கள், 40 ஆண்டுகளாக தமிழ் முதலீடுகள், தொழில்முனைவு மற்றும் திறமைகளை வேறு இடங்களில் செலுத்தியுள்ளது.

இதன் பிரதிபலனே அந்த நாட்டின் தொடர்ச்சியான அரசியல் ஸ்திரமின்மைக்கு ஆணிவேராகும்.

இந்த நிலையில் 2023 ஆம் ஆண்டில், சர்வதேச நாணய நிதியப் பிணை எடுப்புக்கு பின்னர், தமிழ் பாரம்பரிய தளங்களை அழிக்கும் போக்கு அதிகரித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பிற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் கலாசார இனப்படுகொலையானது தென்னிலங்கை சிங்கள பௌத்த தீவிரவாதிகளை திருப்திப்படுத்துவதாகவே பார்க்க முடியும்.

கலாசார இனப்படுகொலையின் அண்மைய நிகழ்வுகளில் சில தமிழர் பாரம்பரியமான கிண்ணியா வெந்நீரூற்று திருகோணமலையில் பெயர் மாற்றம், வரலாற்று தமிழர் வழிபாட்டுத்தலமான குருந்தூர்மலை அழிப்பு மற்றும் மட்டக்களப்பிலும் பல இடங்களிலும் நில அபகரிப்புகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நி)

## குரங்குகள் விவகாரம் குறித்து அரச மட்ட பேச்சு இல்லை-பந்துல

(கொழும்பு)

இலங்கையிலுள்ள குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவது தொடர்பில் இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் இடையில் எவ்வித பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை என அமைச்சரவைப்பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தனியார் நிறுவனமொன்றே இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## 63 வயதுடைய பெண் கழுத்தறுத்துக் கொலை

(கொழும்பு)

மிஹிந்தலை கள்ளஞ்சிய பகுதியிலுள்ள வீடொன்றில் 63 வயதுடைய பெண் ஒருவர் கழுத்து அறுத்து கொல்லப்பட்டுள்ளதாக கள்ளஞ்சிய பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில், மகாகனதரவ என்ற பிரதேசத்தில் வசித்து வந்த டி.பி.சந்திராவதி (63) என்ற பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டின் சமையலறையில் குறித்த பெண் கூரிய ஆயுதத்தால் கழுத்தை அறுத்து நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக கள்ளஞ்சிய பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் எவரும் தப்பமுடியாது

## நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

கடந்த 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக்குண்டு தாக்குதலுக்கு காரணமானவர்கள் எவரும் தப்பமுடியாதென நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு எழுப்பப்பட்ட கேள்விக்கு இவ்வாறு பதில் வழங்கியிருந்தார்.

தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர் முன்னெடுக்கப்பட்டிருந்த விசாரணைகளில் கத்தோலிக்க திருச்சபை திருப்தியடையவில்லை என்றாலும், இது தொடர்பாக பல நியாயமான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தாக்குதல் சம்பவத்தின் போது கடமையை புறக்கணித்த அதிகாரிகள் தொடர்பாக உச்ச நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாக விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

தாக்குதல் இடம்பெற்ற போது சேகரிக்கப்பட்ட அனைத்து தகவல்களும் அடங்கிய அறிக்கை பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சரால் தயாரிக்கப்பட்டுள்ள தாகவும், அந்த அறிக்கையினை ஆயர்கள் மாநாட்டில் வழங்க உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

## அரை சொகுசு பேருந்து சேவைகள் விரைவில் ரத்து

எதிர்வரும் மே மாதத்துடன் அரை சொகுசு பேருந்து சேவைகளை ரத்து செய்யவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக அரைச் சொகுசு பேருந்துகளை சாதாரண பேருந்து சேவையாக மாற்றம் செய்யவுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரொன்டோ தெரிவித்துள்ளார்.

தற்போது, 430 அரை சொகுசு பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதாக் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில் லிங்ஷ்ரெடி மிக்ஸ், அறுகுவெளி, நாவற்குழி, கோகிலா கண்டி மங்களாபட்டறை, கோகிலா கண்டித் துறை, மறவன்புலவு, மறவன்புலவு கேரை தீவு, நாவற்குழி கேரை தீவு வீதி, தச்சந்தோப்பு கேரைதீவு வீதி, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம், கோவில் குளம் 10 ஆம் ஒழுங்கை, மகாறம்பைக் குளம், மதுரநகர் கல் நாட்டின குளம், பெரிய கூமரசங்குளம், சமனங் குளம், சிதம்பர புரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 04

ஆனால் அப்போது இந்திய அரசு கச்சதீவுப் பிரச்சினையில் உரிமை கொண்டாட போதுமான ஆவணங்கள் இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்தது. இந்தியத் தூதர் மூலம் கச்சதீவு உடைமை பற்றி முடிவெடுக்கும் வரை இலங்கைக் கடற்படையினர் அங்கே பயிற்சி பெறுவதற்கான முயற்சிகளை ஒத்திப் போடுக என இலங்கை அரசுக்கு இந்தியா தெரிவித்தது. இலங்கை அரசோ, தன் முடிவை ஒத்திப் போட்டு விட்டோம் என்றும் ஆனால் கச்சதீவு தன்னுடையது தான் என்றும் இந்திய அரசுக்குச் சொன்னது.

கச்சதீவின் உரிமைப் பிரச்சினையில் வரலாற்று உண்மைக்ளை அடிப்பண்டயாகக் கொண்ட ஒரு நிலையான கொள்கையை இலங்கை அரசாங்கம் எப்போதும் கடைப்பிடித்து வருகிறது. கச்சதீவுக்கான இந்திய மற்றும் இலங்கை உரிமை கோரல்களைத் தீர்மானிப்பது என்பது பாக்கு நீரிணை கடற்பரப்பில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான எல்லைக்கோட்டை நிர்ணயிப்பதோடு நெருக்கமாக தொடர்புடையது.

இந்தியாவும் இலங்கையும் சுதந்திரத்தின் போதோ அல்லது சுதந்திரத்திற்குப் பிந்தைய உடனடி சகாப்தத்தில் அதன் கடல் எல்லைகளை அதிகாரபூர்வமாக வரையறுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. ஏனெனில் இரண்டும் ஒரே ஏகாதிபத்திய (ஆங்கிலேயரால்) சக்தியால் ஆளப்பட்டன.

ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அவர்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் 1920 ஆம் ஆண்டளவில் கடல் எல்லையை வரையறுக்க சில முயற்சிகள் எடுத்திருந்தாலும் அது முற்றுப் பெறவில்லை.

1921 ஆம் ஆண்டின் இந்தியா - இலங்கை கடல் எல்லை சம்பந்தமாக அளிக்கப்பட்ட அறிக்கை சம்பந்தமாக இஸ்தான்புல் துருக்கியில் 12.15 ஒக்டோபர் 2008 வரை நடைபெற்ற மாநாடு ஒன்றில் திருசனத்டி சில்வா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட "இந்தியாவுடன் கடல் எல்லையைப் பகிர்தல்: இலங்கை அனுபவம்" என்னும் கட்டுரையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

சர்வதேச சட்ட அரங்கில் ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு என்ற கருத்து செயற்படத் தொடங்குவதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே, துறைமுகங்களுக்கு கப்பல்களை அனுகுவது தொடர்பாக, இலங்கை தனது துறைமுகங்கள் மற்றும் அதை ஒட்டிய கடல் மீது கடல் சார் அதிகார வரம்பைப் பயன்படுத்தியுள்ளது. 1702 ஆம் ஆண்டில், டச்சு காலனித்துவ காலத்தில், பீரங்கித் தாக்குதலுக்கு எட்டிய தூரத்தில் மூன்று மைல் தொலைவில் உள்ள பிராந்தியக் கடலை இலங்கை பராமரித்தது.

ஆரம்பத்தில் சில காலம் இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லைப் பிரச்சினை வாய்ப் பேச்சில் மட்டுமே இருந்தது. செப்டெம்பர் 04.1918 அன்று, மதராஸின் அதிகாரிகள் இந்திய அரசாங்கத்திற்கு (அப்போது ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டது) இந்திய எல்லையின் அப்போதிருந்த மூன்று மைல் கடல் எல்லையை மீன் வளத்தைப் பாதுகாப்பதற்காக பன்னிரெண்டு மைல்களுக்கு நீட்டிக்கப்பட வேண்டும் என்று முன்மொழிந்தனர்.

மன்னார் வளைகுடா மற்றும் பாக்கு நீரிணையை திறந்த நீர் (அதாவது ஒரு குறிப்பிட்ட நாட்டின் அதிகார வரம்பிற்கு உட்படா) என அறிவிக்க வேண்டும் என்றும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கடல் எல்லை பிரிக்கப்பட வேண்டும் என்றும் சென்னை அதிகாரிகள் பரிந்துரைத்தனர். இருப்பினும் இந்திய (ஆங்கிலேய) அரசு லண்டனுக்கு அளித்த அறிக்கையில் இந்த திட்டத்தை ஆதரிக்கவில்லை. அந்த நேரத்தில் இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் அதிகாரிகள் அந்தந்த நீர்நிலைகளை தங்களது மாட்சிமையின் களத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதினர்.

அதனை அடுத்து இருநாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லைகளை வரையறுப்பது 'தொடர்பான பிரச்சினையை விவாதிப்பதற்காக ஒரு மாநாட்டை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு மதராஸ் அதிகாரிகள் பரிந்துரைத்தனர். இந்த பிரச்சினையில் சில பொதுநலன்கள் இருந்தன. மற்றும் பல செய்தித்தாள்கள் இந்த பிரச்சினையில் கட்டுரைகளை வெளியிட்டன. 1918இல் ஒழுங்கு செய்யப்பட்ட மாநாட்டில் பங்கேற்பதற்காக நான்கு அதிகாரிகள் அடங்கிய குழுவை சென்னை அதிகாரிகள் இலங்கைக்கு அனுப்பினர்.

சமதூரம் மற்றும் இடைநிலைக் கோடு என்ற கடல் கொள்கைகளின் சர்வதேசச் சட்டத்தின் கீழ்பாக்கு நீரிணையின் எல்லைநிர்ணயம் இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் கச்சதீவு என்ற தரிசு தீவுக்கு அருகில் உள்ள பகுதியை எல்லை நிர்ணயம் செய்யும் போது ஒரு பிரச்சினை எழுந்தது. எனினும் கச்சதீவை எல்லை நிர்ணயம் செய்வது தொடர்பான விவாதத்தில் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக சமதூரம் என்ற கொள்கையில் இருந்து விலக அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் குழு 1921 ஆம் ஆண்டு இது தொடர்பான ஒரு அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பித்தது. அதிகாரிகளின் இறுதி எல்லை நிர்ணயத்தின்படி, கச்சதீவு ஆனது இலங்கையின் அதிகார வரம்பில் அதன் மேற்கில் மூன்று மைல் நீளமுள்ள கடல் எல்லையுடன் ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பாகக் கருதப்பட்டது. இந்த எல்லை நிர்ணயம் இலங்கைக்கு சற்று பெரிய நிலப்பரப்பைக் கொடுத்தது.

இது இந்திய தரப்பால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. அதற்குக் காரணம் அத்தகைய எல்லை நிர்ணயம் இலங்கைக்கு அதன் மீன்பிடிக்கு பரந்த நிலப் பரப்பை வழங்கியதோடு இந்திய மீனவர்களின் செயற்பாட்டு பகுதிகளை சுருக்கி விட்டது. எனவே இந்தியா 1921 முன்மொழிவுகளை ஏற்கவில்லை.

1921 ஆம் ஆண்டு ஆங்கிலேய ஆட்சியில் வகுக்கப்பட்ட மீன்பிடி எல்லையின்படி, கச்சதீவின் கிழக்குப் பகுதியில் இலங்கை மீனவர்களும் மேற்குப் பகுதியில் இந்திய மீனவர்களும் மீன் பிடித்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பிறகு கடல் எல்லையை வரையறுக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது.

இலங்கை-இந்திய சர்வ தேச எல்லைக் கோடு




துரதிர்ஷ்டவசமாக, அந்தந்த கடல் மண்டலங்களை நிறுவுவதற்கான முயற்சியில் இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் கலந்தாலோசிக்கவில்லை. 1956 ஆம் ஆண்டில், இந்தியா ஒருதலைப்பட்சமாக தனது கடல் எல்லையை 3 முதல் 6 கடல் மைல்கள் வரை நீட்டித்தது. பின்னர் அதன் பிராந்திய நீர்நிலைகளை ஒட்டிய 100 கடல் மைல்கள் பரப்பளவைக் கட்டுப்படுத்தியது.

இலங்கையும் அதைப் பின்பற்றி இதே போன்ற அதிகார வரம்பை அறிவித்தது. 1967 இல், இரு நாடுகளும் தங்கள் கடல் அதிகார வரம்பை 12 மைல்கள் வரை நீட்டிப்பதன் மூலம் இரு தரப்பு உறவுகளில் பதற்றத்தை அதிகரித்தன. 1970 களில் இரு நாடுகளும் கடல் எல்லைகள் தொடர்பான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட பிறகு வேறுபாடுகளின் தீவிரம் நீர்த்துப் போனது.

## இந்திய- இலங்கைகடல் சார் ஒப்பந்தம்

இந்திய அரசும் இலங்கையும் வரலாற்றுச் சான்றுகள் மற்றும் அமைதியான சகவாழ்வு என்ற புகழ் பெற்ற அணிசேரா இயக்கத்தின் கொள்கையைக் கருத்தில் கொண்டு இலங்கை- இந்திய கடல் எல்லையில் ஒரு தீர்வை எட்டியது.1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களின் கீழ் கச்சதீவு உரிமைச் சிக்கல் முடிவுக்கு வந்தது. அவ்வொப்பந்தத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது.

பாக்கு நீரிணையில் கடல் எல்லையை வரையறுப்பதற்கான இந்திய-இலங்கை கடல்சார் ஒப்பந்தத்தின் மூலம், இந்திராகாந்தி கச்சதீவின் இறையாண்மையை இலங்கை பிரதமர் சிறி மா... பண்டாரநாயக்காவிடம் ஒப்படைத்தார். அவ் ஒப்பந்தத்தின்படி இந்திய மீனவர்கள் இத்தீவை மீன்பிடிக்க பயன்படுத்தலாம் என்பது தான் இந்தியாவுக்கு சாதகமாக இருந்தது

(தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ...

படை படைப் பிரிவில் இடம்பெற்றுள்ளது என்று இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவ வீரரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக, அவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவத்துக்கான காரணம் இதுவரையில் வெளியாகாத நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன. (ம-7,9)

## ஐ.எம்.எப் உடன்...

மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடந்த மாதம் 22ஆம் திகதி வழங்கப்பட்டது.

48 மாத காலப்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ள இந்த கடன் தொடர்பான ஆவணங்கள் ஏற்கெனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாட்டை உறுதி செய்துகொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பிரதான கொள்கைகளை சட்டமாக மாற்றுவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7,9)

## மல்லாகத்தில்...

இந்த ஷெல் இருப்பது நேற்று முன்தினம் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

நீதிமன்ற நடவடிக்கையின் பின்னர் நேற்று அவ்விடத்திற்கு வந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் அந்த ஷெல்லினை மீட்டுச் சென்றுள்ளனர். (ம-7,9,104)

## வெப்பமான...

லான இடங்களில் இளைப்பாறுமாறும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

முதியோர் மற்றும் நோயாளர்கள் தொடர்பிலும் இக்காலகட்டத்தில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடினமான வேலைகளை மட்டுப்படுத்துமாறும், சிறு குழந்தைகளை வாகனங்களில் தனியாக விட்டுச்செல்ல வேண்டாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7,9)

## நல்லிணக்க...

யில்,

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை எதிர்ப்பவர்கள் தங்களுடைய கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும். அதற்கான காரணத்தையும் அவர்கள் விலாவாரியாக முன்வைக்கவேண்டும்.

பாராளுமன்றத்தில் சட்டவரைவு நிறைவேறும்போது அதன் ஊடாகத் தான் அரசு அந்தப் பணிகளை முன்னெடுக்கும். இந்த அரசினுடைய நடவடிக்கை வெற்றியளிக்கும் என்றும் நம்பிக்கை வெளியட்டுள்ளார்.

3 கட்டங்கள் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப அமைச்சரவை உபகுழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## போலி பிரசாரங்...

ஊடகங்கள் மூலம் பொய்களை பரப்பி சமூகமயப்படுத்தியது போன்று தற்போதைய இலங்கை ஜனாதிபதியும் பொய்ப் பிரசாரம் செய்யும் கூட்டு அரசியல் சூழ்ச்சியில் ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்தார்.

உண்மையான ஊடகவியலாளர்களை கூட இழிவுபடுத்தி, தங்களை ஊடகவியலாளர்கள் என்று அழைத்துக் கொள்ளும் ஒரு குழுவின் மூலம் உண்மைகளை பொய்யாகவும், பொய்களை உண்மையாகவும் மாற்றும் பெரும் பிரசாரம் செயற்படுத்தப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் பதவியைப் பெற்றுக் கொள்ள, அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி கலந்துரையாடுவதாக தற்போதைய அரசாங்கம் பொய்யான செய்திகளை உருவாக்கி வருவதாகவும், மக்கள் ஆணை இல்லாத, மக்களால் நிராகரிக்கப்பட்ட தற்போதைய அரசாங்கத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி ஒரு போதும் இணையாது எனவும், எனவே இவ்வாறான பொய்யான மற்றும் போலியான செய்திகளை நம்பி மக்கள் ஏமாற வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்தார்.

பிரதமர் பதவி தொடர்பாகவோ அல்லது தேசிய அரசாங்கம் தொட்ர்பாகவோ அல்லது அமைச்சுப் பதவிகள் தொடர்பாகவோ தானோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியோ எந்தவித கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை எனவும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கோயபல்ஸ் கொள்கையை கடைப்பிடித்து பெரும் போலி ஊடக பிரசாரத்தை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் தேர்தலுக்கு பயமெனவும், முடியுமானால் கிட்டிய காலத்தில் பாராளுமன்ற தேர்தலையோ அல்லது ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது தற்போது நிதி ஒதுக்க நழுவி வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையோ நடத்துமாறு தான் தற்போதைய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,

அவ்வாறு தேர்தலை நடத்தும் போது உண்மையான மக்கள் ஆணை எங்குள்ளது என்பதை நன்றாக புரிந்து கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் வாக்குரிமைக்கு பெறுமானம் சேர்க்கும் விடயத்தில் என்றும் முன்நிற்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மக்கள் ஆணையற்ற தற்போதைய அரசாங்கத்துடன் பணத்துக்கும் சலுகைகளுக்கும் அமைச்சுப் பதவிகளுக்கும் விலைபோகும் உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியிலோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியிலோ இல்லை எனவும், என்றும் மக்கள் ஆணையே உயர்வானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.(ம-7,9)

## இறக்...

கள் தொடர்பான மீளாய்வு கூட்டத்தின் பின்னர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"முதல் 03 மாதங்களுக்கு சுங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள வருமான இலக்கு 270 பில்லியன் ரூபாயாகும்.

ஆனால் அந்த காலகட்டத்தில் கிடைத்த வருமானம் எதிர்பார்த்த வருமானத்தை விட 12 சதவீதம் குறைவாகவே காட்டப்பட்டுள்ளது.

2021இல், 485 பொருட்களும் 2022ல் 750 பொருட்களும் இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டன.

இதன்படி, இது தொடர்பான கட்டுப்பாடுகள் விரைவில் தளர்த்தப்படும். மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களம் வழங்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய முடிவுகள் எடுக்கப்படும்" என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.(ம-7,9)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 18/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1545
துலாம் 4 3 7 3 5 6

தன நிதானய
திகதி 2023.04.18
சீட்டிழுப்பு இலக்கம் 1120
O 02 11 23 67

கொவிசெத
திகதி 2023.04.18
சீட்டிழுப்பு இலக்கம் 3332
I 04 10 55 75

மெகா பவர்
திகதி 18/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1438
M 14 37 63 66 75

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.18
சீட்டிழுப்பு இலக்கம் 399
மகரம் 02 15 19 24 மகரம்

மஹஜன சம்பத
திகதி 2023/04/18
சீட்டிழுப்பு இலக்கம் 5090
V 6 5 7 1 4 4

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2064
சீட்டிழுப்பு திகதி 2023.04.18
நிறம் இள நீலம்
தினம் செவ்வாய்க்கிழமை
T 15 16 62 68
ரூ. 3,318,660/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.18
சீட்டிழுப்பு இல : 4225
ரூ. 4,576,120/-
25 31 45 54 Y

சசிரி
313
2023.04.18
செவ்வாய்க்கிழமை
10 24 25
2,769,820/-

ரூ. 2,836,756.40
08 11 15 33
2023-04-18
3776
சிவப்பு
ரூ. 9,583,340/-

M 40 01 02 19 23
1240
2023.04.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 323,617,047.00

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1890
சீட்டிழுப்பு திகதி : 2023.04.18
ரூ. 4,590,060/-
16 32 38 49 H


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15297)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**

# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 33 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**


- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை

**முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.**

(15297)

**077 076 0389**
**076 911 9371**
**076 739 0413**


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1952 - 01 - 05 | 2023 - 04 - 18 |

## கனகசுந்தரம் வெற்றிவேல்

(முன்னாள் எழுதுவினைஞர்,
மில்க்வைற் சோப் தொழிற்சாலை, சோதிடர்)

மஞ்சத்தடி, இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் வெற்றிவேல் அவர்கள் நேற்று (2023.04.18) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் - கணேஸ்வரி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - இரத்தினம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற பிறேமாவின் அன்புக் கணவரும் தயாளினியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்ட சித்த வைத்திய சாலை) அன்புத் தந்தையும் கேதனனின் (விரிவுரையாளர் - ATI யாழ்ப் பாணம்) அன்பு மாமனாரும் சக்தியின் அன்புப் பேரனும் மற்றும் காலஞ்சென்ற திருமதி சுந்தரவதனா தர்மலிங்கம் மற்றும் ஜெயசுந்தரம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இந்திராணி, பாலசுப்பிரமணியம், மகேஸ்வரமூர்த்தி, கெங்காதரன், காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் அசோகவதி, பாலச்சந்திரன், குகநேசன், ரஞ்சன், தர்மலிங்கம், உதயா, ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2023) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- M.கேதனன்
077 100 0758, 021 224 5052

தகவல்:
குடும்பத்தினர்
(15298)

# மும்பை வெற்றி



ஐதராபாத்திற்கு எதிரான போட்டியில் மும்பை அணி வெற்றி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 192 ரன்கள் எடுத்தது. மும்பை அணியில் கேமரூன் கிரீன் 64ழு, இஷான் கிஷன் 38, திலக் வர்மா 37, ரோஹித் சர்மா 28 ரன்கள் எடுத்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஐதராபாத் அணி 178 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக கேமரூன் கிரீன் தெரிவு செய்யப்பட்டார். (ம-7,9)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127


# இரு வைத்தியர்களிடம் சாட்சியம் பதிவு

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் குழந்தை பிறந்து இறந்தமை தொடர்பில் இரண்டு வைத்தியர்களிடம் நேற்று செவ்வாய்க் கிழமை சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் குழந்தை ஒன்று பிறந்து உயிரிழந்திருந்தமை தொடர்பில் பருத்தித் துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுதுரை முன்னிலையில் மரண விசாரணை இடம்பெற்றபோது இரண்டு வைத்தியர்கள் சாட்சியம் அளித்தனர். (ம-7,960)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15291)

**076 825 7716** (ஆகாஸ்)

# சர்வதேச வேலை வாய்ப்பு

நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு சர்வதேச ரீதியில் ஆரம்பிக்கப்படவுள்ள எமது W.E.C நிறுவனத்தின்புதிய கிளைகளுக்கு பல்வேறு தரப்பட்ட பதவிகளுக்குஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். ஒவ்வொருவரினதும் தகமைகள்,திறமைக்கேற்ப பதவிகள் மற்றும் சம்பளம்,போனஸ் போன்ற வாய்ப்புகள் வழங்கப்படும். எமது நிறுவனத்தின் ஊடாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பெறும் வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும். வணிகத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் தொடர்பு கொள்ளலாம்.அனைத்து மாவட்டங்களில் இருந்தும் நபர்கள் இணைய முடியும்.அனைத்து பிரிவுகளுக்கும் பயிற்சி வழங்கப்பட்டு பதவிகள் நிரந்தரமாக்கப்படும். (15301)

**0771743524/0779858580**
**021 7223317**

# விசா சம்பந்தமான ஆலோசனைகள்

Uk நாட்டிற்கு வேலைவாய்ப்பு விசா தேவைப்படுபவர்களும் USA மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு Tour விசா தேவைப்படுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**HYBRID INTERNATIONAL HUB PVT LTD**

**076 250 0098**
**021 222 1265**
(C-6383)

# IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI
(15283)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

# வீடு விற்பனைக்கு

மருதனார்மடத்தில் இருந்து மானிப்பாய் செல்லும் வழியில் 500m தூரத்தில் றோட்டில் இருந்து 50m உள்ளே புதிய வீடு விற்பனைக்குண்டு (விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்) (15302)

**076132 01961 0771042292**


மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்க
முப்பதாவது ஆண்டை முன்னிட்டு
குழந்தைக் கவிவித்தகர்
அமரர் சபா. அருள்சுப்பிரமணியம் அவர்கள் நினைவாகக்

# கவிதையாக்கற் போட்டி

**தலைப்பு:- போதையில் இருந்து தமிழினமே விழித்தெழு**

- முதல் மூன்று இடங்களுக்குப் பரிசில் வழங்கப்படும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும்.

- கவிதைகள் மரபுக் கவிதையாகவோ புதுக்கவிதையாகவோக இருக்கலாம். ஆனால் 25 - 30 வரிகளில் இருக்க வேண்டும்.
- பங்குபற்றுநர் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குள் வசிப்பவராகவும் 20 - 40 வயதினராகவும் இருக்க வேண்டும்.
- அனுப்பும் படைப்புக்கள் தங்களது சொந்த ஆக்கமாகவும் எந்த ஊடகங்களிலும் வெளிவராத ஆக்கமாகவும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அனுப்பும்போது தங்கள் அடையாள அட்டையின் நிழற்பிரதி இணைத்துப் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

**இறுதித் திகதி:- 30.04.2023 (இற்கு முன்னர் அனுப்பவும்)**

அனுப்ப வேண்டிய முகவரி
திரு. வி. சிற்றம்பலம்
[illegible]விருத்திச் சங்கம்
மாதகல்

தகவல்: அ. ஞானானந்தன்,
தலைவர்
கல்வி அபிவிருத்திச் சங்கம்
மாதகல்
(15293)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org